வானவில்

VAANAVIL
ISSUE – 66 JUNE 2016

இதழ் - 66 ஆனி 2016

# இலங்கை அரசு தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும்!

ஒரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியே அதன் வெளிநாட்டுக் கொள்கை என்று கூறப்படுவதுண்டு. அந்த வகையில் ஒவ்வொரு நாட்டுக்கும் உள்நாட்டுக் கொள்கையும் வெளிநாட்டுக் கொள்கையும் இரட்டைக் குழந்தைகள் போன்றவை.

இரட்டைக் குழந்தைகளில் உள்ள விசேட அம்சம் என்னவென்றால், ஒரு குழந்தைக்கு மகிழ்ச்சி வந்தால் அது மற்றக் குழந்தைக்கும் வரும். அதேபோல, ஒரு குழந்தைக்கு ஏதாவது நோய் உள் காரணிகளால் வந்தால் அது மற்றக் குழந்தைக்கும் ஏற்படும்.



அதைப் போலவே, ஒரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கையில் ஏதாவது மாற்றம் அல்லது தடுமாற்றம் ஏற்பட்டால், அதன் தாக்கம் வெளிநாட்டுக் கொள்கையிலும் பிரதிபலிக்கும். இலங்கையின் தற்போதைய நிலையை எடுத்து நோக்கினால், அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருப்பதைக் காணலாம்.

2015 ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் ஒரு குழப்ப நிலை உருவாகி இருக்கின்றது. அதற்குக் காரணம், தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் உள்நாட்டுக் காரணிகளில் தங்கி இருந்ததை விட, வெளிநாட்டுச் சக்திகளின் தயவிலும் ஆலோசனையிலும் அவர்களது தேவையிலும் தங்கி இருந்ததுதான்.

தற்போதைய மைத்திரி — ரணில் வலதுசாரி அரசாங்கம், உள்நாட்டில் முற்றுமுழுதாக பெரும் முதலாளிகளுக்குச் சார்பான கொள்கை ஒன்றைப் பின்பற்றி வருகிறது. மக்கள் நலன் கருதி கடந்த காலத்தில் அரசாங்கத்தால் நடாத்தப்பட்டு வந்த பொதுத்துறைகள் படிப்படியாக ஊதாசீனப்படுத்தப்பட்டு, தனிப்பட்ட நிறுவனங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றன. யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி முன்னைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து நாடு மிகப்பெரிய பொருளாதார முன்னேற்றத்தை அடையக்கூடிய சூழல் உருவானதைக் கண்டு, அதை எப்படியும் தடுத்து நிறுத்தி, நாட்டை மீண்டும் அழிவுப்பாதையில் இழுத்துச் செல்ல வேண்டும் எனத் தீர்மானம் செய்து செயல்பட்ட சர்வதேச மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தற்போதைய அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது.

அதேபோல, வெளிநாட்டுக் கொள்கையிலும் இன்றைய அரசு பாரிய மாற்றங்களைச் செய்துள்ளது. அதனை அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை ஒன்று உணர்த்தி நிற்கிறது. அந்த உரையில், 'எமது நாட்டுக்கு உலகில் தற்போது எதிரிகள் என்று யாரும் இல்லை' என்று அவர் பெருமிதமாகச் சொன்னார். அதன் அர்த்தம் முன்னைய அரசுக்கு எதிரிகள் இருந்தார்கள் என்பதுதான். உண்மையும் அதுதான்.

முன்னைய அரசின் மீது உலகின் சில பலம்வாய்ந்த சக்திகள் வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. அதற்கான காரணங்களும் இருந்தன.

அந்த அரசாங்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள், தேசியவாத சக்திகள் என்பனவற்றின் கூட்டரசாங்கமாக இருந்தது. இந்த சக்திகள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்ப்பவையாகவும், தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், தேசிய ஒருமைப்பாடு என்பனவற்றை உயர்த்திப்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# போருக்கு பின்னரான வடக்கின் குற்றச்செயல்கள்

அண்மைக்காலமாக வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாள்வெட்டுக்கள், கொலை, கொள்ளை, சிறுவர்கள் துஸ்பிரயோகம், பாலியல் வன்முறைகள், போதைப் பொருள் கடத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற சமூக விரோதச் செயல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளதாக அறியக் கிடைக்கின்றது. இந்த குற்றச்செயல்கள் அனைத்துமே யாழ் குடாநாட்டில் மாத்திரமன்றி, நாடு தழுவிய ரீதியில் நடக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. எனினும் யாழ் குடாநாடு தவிர்ந்த, நாட்டின் ஏனைய நிலப்பரப்பு மற்றும் அங்கு வாழும் மக்கள் தொகையினை, யாழ் குடாநாடு போன்ற மிகச் சின்னஞ்சிறிய நிலப்பரப்பில் வாழும் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், யாழ் குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்கள் அதிகமென பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கில் பெருகி வரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையோரை கைது செய்யவும் அவற்றை கட்டுப்படுத்தவும் வட மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் நேரடி கண்காணிப்பில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்ற நிலையிலும், குற்றச் செயல்கள் குறைவின்றி அதிகரித்த வண்ணமேயுள்ளன. யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி, 'யாழ் குடாநாட்டை அச்சுறுத்தும் சமூகவிரோதிகள் அனைவரையும் கண்காணித்து, கைது செய்து நீதிமன்றங்களில் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்' என்று பகிரங்கமாக கூறி வருகின்றார். சட்டத்துக்கு முரணான வகையில் வாள்கள், ஆபத்தான கத்திகள் என்பவற்றை கம்மாலைகள் உற்பத்தி செய்வதற்குத் தடையுத்தரவு பிறப்பித்துள்ள யாழ்.மேல் நீதிமன்றம், அவற்றை வைத்திருப்பவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் உடனடியாகக் கையளிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்க முன்னரும் வடக்கில் குற்றச் செயல்கள் நிகழ்ந்தன என்பதை யாரும் மறுக்க முடியாது. எனினும் இப்போது போல மிகப்பெரியளவில் நிகழவில்லையென வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ் ஆயர் போன்ற பலர் கூறி வருகின்றனர். ஆனால் வடக்கு மாகாண ஆளுனரோ இதனை மறுத்து 'வடக்கில் போர்க்காலத்திலும் குற்றச்செயல்கள் இடம்பெற்றன. ஆனால் ஊடகங்கள் இதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை' எனக் கூறியுள்ளார். ஆளுனர் கூறுவதிலும் நூறு வீதம் உண்மையும் இருக்கத்தான் செய்கின்றது. உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழர்சார் ஊடகங்களிலும் சமூக அக்கறை கொண்டவர்கள் மத்தியிலும் அலசி ஆராயப்படும் முக்கிய பிரச்சனையாக இன்று இது உருவெடுத்துள்ளது. பெரும்பாலான பிற்போக்கு தமிழ் தேசிய ஊடகங்கள், புலிகள் இருந்த காலத்தில் இவ்வாறான குற்றச்செயல்கள் நிகழவில்லையெனவும் இலங்கை அரச படையினரின் பின்னணியிலேயே சமூக விரோதிகள் இந்தக் குற்றச்செயல்களை புரிவதாகவும் கூறி வருகின்றன.

இன்று வடக்கின் ஒரு பாரிய சமுதாயப்பிரச்சனையென பேசும் பொருளாகிவிட்ட குற்றச்செயல்கள் ஓர் உலகந்தழுவிய பிரச்சனையே. இந்தக் குற்றத்தைப் புரிவோர் பரந்த கல்வியறிவு கொண்ட பணம் படைத்த மேற்கத்தைய நாடுகளிலிருந்து குறைந்த கல்வியறிவு கொண்ட வறிய நாடுகள் வரை பரவிக்கிடக்கின்றனர். சகல முரண்பாடுகளையும் (ஆயுதங்களால்) வன்முறைகளால் தீர்க்கலாம் என்ற மனப்பாங்கு, குறுகிய காலத்தில் குறுக்கு வழியில் பெருமளவு பணம் சம்பாதிக்கும் சிந்தனை, கட்டுக்கு மீறிய பாலியல் கிளர்ச்சி போன்றனவற்றை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் இன்று உலகின் அனைத்து சமூகமே திண்டாடிக் கொண்டிருக்கின்றது. உலகின் தலை சிறந்த உயர் கல்விக்கூடங்களில் இது தொடர்பாக எத்தனையோ ஆராச்சிக் கட்டுரைகள் எழுதப்பட்டுவிட்டன. பல நாடுகளில் இவ்வாறான குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்குகிறார்கள். மரணதண்டனை அமுலில்லாத வேறு பல நாடுகளில் சிறைத்தண்டனைகள் வழங்கப்பட்டு, சமூகத்தில் நல்ல பிரசையாக திருந்தி வாழ்வதற்கு குற்றவாளிகளுக்கு சீர்திருத்தப் பள்ளிகளில் போதிய கல்வியறிவு வழங்கப்படுகின்றது. ஆனால் அவ்வாறு சிறையிலிருந்து திரும்பியவர்களில் ஒரு பகுதியினர், மீண்டும் அதே குற்றத்தை புரிந்து மீண்டும் சிறை செல்கிறார்கள்.

எனவே வடக்கின் பல பகுதிகளில் தலையெடுத்துள்ள குற்றச்செயல்களை, வடக்கில் மாத்திரமே நடக்கும் பிரத்தியேகப் பிரச்சனையாகப் பார்க்காமல், இது உலகின் பல்வேறுபட்ட சமூக மட்டங்களிடையே இடம்பெறும் ஒரு பிரச்சனையாகக் கருத வேண்டும். இவற்றில் குறிப்பாக போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கு சர்வதேச ரீதியிலான நடவடிக்கைகளும் அவசியம். தமிழ் ஆயுத இயக்கங்கள் சண்டித்தனம், மிரட்டல், களவு போன்ற சிறிய குற்றம் செய்தவர்களுக்கும் விபச்சாரிகளுக்கும், யுத்தகாலத்தில் பகிரங்க மரணதண்டனை வழங்கினார்கள். அதேவேளையில் தமது இயக்கத்தேவைக்கென கொள்ளைகள் அடித்தார்கள், போதைப் பொருளும் கடத்தினார்கள். புலிகள் பல சிங்களக் கிராமங்களில் புகுந்து பச்சிளம் பாலகர்களிலிருந்து கர்ப்பிணிகள், முதியவர்கள் வரை பல ஆயிரக்கணக்கானவர்களை வெட்டியும் சுட்டும் கொன்றார்கள். ஆனால் அப்போதும் இப்போதும் தமிழர்களில் பெரும்பாலனவர்கள் இவற்றினை குற்றச்செயல்களாக பார்ப்பதில்லை. இலங்கை இனவாத அரசுக்கும் தமிழ் தேசியத்திற்குமான முரண்பாட்டை ஆயதப் போராட்டம் மூலம் தீர்க்கப்போவதாகக் கூறியவர்கள் செய்த (போர்க்)குற்றச் செயல்களையும் போருக்கு முன்னர் மற்றும் பின்னரான வடக்கின் குற்றுச் செயல்களையும் ஒப்பிட்டால் இது எமது சமூகத்தில் எப்போதுமே இருந்து வரும் ஒரு பிரச்சனையென தெளிவாக உணரலாம்.

---


**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# தோழர் சிவா சுப்பிரமணியம் அவர்களுக்கு
# எமது புரட்சிகர அஞ்சலி!

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நீண்டகால செயற்பாட்டாளரும், பத்திரிகையாளருமான தோழர் சிவா சுப்பிரமணியம் (கே.வீ. சிவசுப்பிரமணியம்) தமது 74ஆவது வயதில் 2016 மே 29ஆம் திகதி யாழ்ப்பாணம் கோண்டாவிலில் காலமானார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த தோழர் சிவா எதிர்பார்க்காத வகையில் திடீரெனக் காலமாகிவிட்டார்.

தோழர் சிவா சுப்பிரமணியம் தமது இளமைக்காலத்திலேயே மார்க்சிச சிந்தாத்தத்தில் ஈடுபாடு கொண்டு, இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.

தொழில் ரீதியாக அரசாங்க எழுதுவினைஞராகச் சேர்ந்துகொண்ட அவர், நாட்டின் பல பகுதிகளில் கடமையாற்றினார். அக்காலகட்டத்தில் தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். அந்தக் காலத்தில் எழுதுவினைஞர்களுக்காக நாடு தழுவிய ரீதியில் செயல்பட்ட மிகப்பெரிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தில் (Government Clerical Service Union – GCSU) இணைந்துகொண்ட தோழர் சிவா, தமது மும்மொழி ஆற்றலால் தலைமைப் பதவி வரை உயர்ந்தார்.

எப்பொழுதுமே நிறைய வாசிப்புப் பழக்கமும் (அவர் புதிய புத்தகங்களை வாங்குவதற்காக மாதந்தோறும் 5,000 ரூபாவை ஒதுக்கி வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்), விடயங்களைக் கூர்மையாக அலசி ஆராய்ந்து பார்க்கும் ஆற்றலும் கொண்ட சிவா, அக்காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடுகளில் தொடர்ந்து பல்வேறு விடயங்கள் குறித்து கட்டுரைகள் எழுதி வந்தார். அத்துடன் மும்மொழி ஆற்றல் உள்ள அவர், பொதுக்கூட்டங்களில் மொழிபெயர்ப்பாளராகவும், புத்தகங்கள்,



கட்டுரைகள் மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார். மிகுந்த இலக்கிய ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார்.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் 'லேக்ஹவுஸ்' நிறுவனம் வெளியிட்டு வந்த 'தினகரன்' நாளேட்டின் ஆசிரிய குழுவில் இணைந்து கொண்ட அவர், பின்னர் அதன் இணை ஆசிரியராகவும், அதன் பின்னர் அதன் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார். 2002இல் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. ஆட்சி அமைந்து, லேக்ஹவுசில் பணிபுரிந்த புலிகளை விமர்ச்சித்த பத்திரிகையாளர்களுக்கு புலிகளால் கொலை அச்சுறுத்தல் ஏற்பட்ட பொழுது, அங்கிருந்து வேலையை இராஜினாமா செய்துவிட்டு வெளியேறிய மனோரஞ்சன், சண்முகம் சுப்பிரமணியம் ஆகியோருடன் சிவா சுப்பிரமணியமும் இணைந்துகொண்டு வெளியேறினார். பின்னர் 'தினகர' பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட 'தமிழ் ஏடு' என்ற வார இதழின் பொறுப்பாசிரியராகச் சிலகாலம் பணியாற்றினார்.

தினகரன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், கொழும்பில் வாழ்ந்த காலத்தில் எழுத்தாளர் நீர்வை பொன்னையனை இணைப்பாளராகக் கொண்டு செயல்பட்டு வரும் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து செயல்பட்டார். அதன் பின்னர் கோண்டாவிலுள்ள தமது வீட்டுக்குச் சென்று அங்கு தமது இறுதிக் காலம்வரை வாழ்ந்தார். அங்கு வாழ்ந்த காலத்திலும், கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினக்குரல்' பத்திரிகையில் அவ்வப்போது அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதி வந்தார்.

இலங்கையில் வாழ்ந்த ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்களில் தோழர் சிவா சுப்பிரமணியம் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர். விடயங்களை சரியான நோக்கிலும், துல்லியமான ஆய்வுகளுடனும், சரியான தரவுகளுடனனும், எளிமையான செழுமைமிக்க மொழி நடையிலும் எழுதக்கூடிய ஆற்றல் மிக்கவர் அவர். அதன் காரணமாக, இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றை மார்க்சிசக் கண்ணோட்டத்தில் ஒரு நூலாக எழுதும்படியும், அதை தாம் அச்சுருவில் கொண்டு வருவதாகவும், கனடாவில் வாழும் இலங்கை இடதுசாரித் தோழர்கள் அவரைக் கேட்டிருந்தனர். அவர் அந்த முயற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் இயற்கை அவரை அரவணைத்துவிட்டது.

தோழர் சிவா சுப்பிரமணியம் போன்ற ஒரு ஆளுமையின் இடத்தை ஈடு செய்வது மிகவும் சிரமமானது. இருப்பினும் நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாக, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி பல மார்க்சியப் புத்திஜீவிகளை உருவாக்குவது சரியான செயல்பாடாக இருக்கும்.

தோழர் சிவா சுப்பிரமணியத்தின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அவருக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**– வானவில் ஆசிரியர் குழு**

# இப்படியும் சில அரசியல் புரட்டர்கள்!

**சோ**வியத் புரட்சியின் தளகர்த்தர் மாமேதை லெனின் அவர்கள் பல நூற்றுக்கணக்கான அரசியல் கட்டுரைகளை எழுதிச் சென்றிருக்கிறார். அவரது கட்டுரைகளில் மிக முக்கியமானது "அரசும் புரட்சியும்" என்ற கட்டுரையாகும்.

அக்கட்டுரையின் தொடக்கத்தில் அவர் மிக முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிடுகிறார். அதாவது, வரலாற்றில் ஆளும் சுரண்டல் வர்க்கங்களுக்கு எதிராக முக்கியமான போராட்டங்களை நடாத்திய மக்கள் தலைவர்களை கொடுங்கோலர்களாக வர்ணித்த முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள், அவர்கள் இறந்த பின்பு அவர்களது கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப்பதற்காக, அவர்களை பரம சாதுக்களாக, அகிம்சாமூர்த்திகளாக, வர்க்க சமரசவாதிகளாக வர்ணிப்பதுண்டு என அவர் குறிப்பிட்டார்.



அவர் சொன்னதுபோல, லெனின் இறந்து, பின்னர் அவரது வாரிசான ஸ்டாலினும் இறந்த பின்பு, அதிகாரத்தைக் கைப்பற்றிய குருசோவ் திரிபுவாதக் கும்பல், லெனினது அத்தனை புரட்சிகரத்தன்மைகளையும் இருட்டடிப்புச் செய்து, அவரை ஒரு பரம சாதுவாக, புத்தராக, காந்தியாக மாற்றியது.

இந்த விதமான அரசியல் புரட்டல்களும், மோசடித்தனங்களும் அன்று மாத்திரம் அல்ல, இன்றும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளது. அதற்கு ஒரு உதாரணம் இதோ:

இவ்வருடம் ஏப்ரல் 07ஆம் திகதி எமது அன்புக்குரிய தோழர் நெடுந்தீவு சின்னத்தம்பி சண்முகநாதன் எதிர்பார்க்காத வகையில் மரணித்தார். அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவரது மகிமையை உணராத பலர், அவர் இறந்த பின்பு அவர் மீது அவரது உறவினர்கள், ஊரவர்கள் மட்டுமின்றி, அவருடன் பழகியவர்கள் அத்தனைபேரும் செலுத்திய மரியாதையைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போயினர்.

அவரது நினைவைப் போற்றி பல செய்திகள், கட்டுரைகள் என்பன ஊடகங்களில் வந்தன. நினைவஞ்சலிக் கூட்டங்களும் நடந்தன. இந்த நிகழ்வுகளில் உண்மையான மணிகளுடன் சில பதர்களும் சேர்ந்து கொண்டன. இவர்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தோழர் சண்முகநாதனுடன் பழகியதை வைத்துக்கொண்டு, அவரைப் போற்றுவது போலப் பசாங்கு செய்துகொண்டு, அவர் பின்பற்றிய உண்மையான கொள்கைகளைத் திரிபுபடுத்தி, அவர் மீது சேற்றை வாரி இறைத்துள்ளனர்.

தோழர் சண்முகநாதன் இறப்பதற்குச் சில காலம் முன்னர் புலம்பெயர் இடதுசாரிகளுக்கான வேண்டுகோள் ஒன்றை எழுதி வீட்டில் வைத்துள்ளார். அதன் கையெழுத்துப் பிரதி அவரது குடும்பத்தினரிடம் உள்ளது. அதன் பிரதியொன்று கனடாவில் செயல்படுகின்ற 'இலங்கை இடதுசாரிகள் கூட்டமைப்பு' என்ற அமைப்பிடமும் உள்ளது. அந்தக் குறிப்பில் தோழர் சண்முகநாதன் வழமையாக அந்த இடதுசாரிகள் கூட்டமைப்புத் தோழர்களிடம் கூறிய கருத்துக்களையே திரும்பவும் எழுதியுள்ளார்.

## மெய்ஞானி

ஆனால், அவரது அந்தக் குறிப்பை வெளியிட்ட சில ஊடகங்கள், அவர் சொன்னவற்றுடன் அவர் சொல்லாததையும் பின் இணைப்பாகச் சேர்த்து மோசடி செய்துள்ளன. அப்படிச் சேர்க்கப்பட்ட விடயங்களை எடுத்துப் பார்த்தால், அதை எழுதியவர்களின் கபட நோக்கத்தைப் புரிந்து கொள்ளலாம்.

அதில் ஒன்று, ரொட்ஸ்கிசம், நவீன திரிபுவாதம், மாஓஇஸம் என்ற சித்தாந்த வேறுபாடுகள் இனி தேவையில்லை என்பது சண்முகநாதனின் கருத்து என்பது. இது தோழா சண்முகநாதனின் இவை சம்பந்தமான தெளிவான நிலைப்பாட்டை மறுப்பதாகும். உண்மை என்னவெனில், எல்லா மார்க்சிச — லெனினிசவாதிகளையும் போலவே, ரொட்ஸ்கிசவாதத்துக்கும், நவீன திரிபுவாதத்துக்கும் எதிரான போராட்டத்தின் மூலமே, மார்க்சிசம் – லெனினிசம் வளர்ச்சி பெற்றது என்பதுதான் தோழர் சண்முகநாதனின் அசையாத கருத்தாகும். அதேநேரத்தில், இந்தச் சித்தாந்த வேறுபாட்டை வைத்துக்கொண்டு, பொதுவான போராட்டங்களில் மார்க்சிச — லெனினிசவாதிகள் மேற்கூறிய போக்குள்ளவர்களுடன் இணைந்து செயல்படுவதை நிராகரிக்கக்கூடாது என்பதுமாகும். (நா.சண்முகதாசனுடன் நாம் முரண்பட்ட விடயங்களில் இதுவும் ஒன்றாகும்)

இரண்டாவது விடயம், இனிமேலும் கம்யூனிஸ்ட்டுகள் ஆயுதப் போராட்டம் மூலம்தான் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது தவறு என்பது தோழர் சண்முகநாதனின் கருத்து என்பதாகும். இதுவும் ஒரு திரிபுபடுத்தப்பட்ட கருத்தாகும். நவீன திரிபுவாதிகள் மக்களின் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை முற்றுமுழுதாக நிராகரித்து, வெறுமனே பாராளுமன்றப் பாதையை மட்டும் வலியுறுத்தியபடியால்தான், புரட்சிவாதிகள் மார்க்சிசத்தின் அடிப்படை விதிகளில் ஒன்றான 'சுரண்டும் வர்க்கம் எந்தப் பலாத்காரத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தை நீடித்து வைத்திருக்கிறதோ, அதே பலாத்காரத்தைப் பயன்படுத்தியே பாட்டாளிவர்க்கமும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்' என்ற கருத்தை வலியுறுத்த வேண்டி வந்தது. ஆனால், இதில் நடைமுறை ரீதியிலான விடயம் என்னவெனில், ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கம் எந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்ற விடயத்தை எப்பொழுதும் மக்களின் எதிரிகள்தான் தீர்மானித்து வந்திருக்கிறார்கள்.

மூன்றாவது விடயம், இலங்கையில் இனி ஒரு புதிய மார்க்சிசக் கட்சியை ஆரம்பிப்பதை விடுத்து, இருக்கின்ற கட்சி ஒன்றுடன் இணைந்து வேலை செய்ய

வேண்டும் என்பது தோழர் சண்முகநாதனின் கருத்து என்பதாகும். இதுவும் மிகவும் தவறானதாகும். தோழர் சண்முகநாதன் இடதுசாரி அரசியலுக்கு வந்தபோது, சர்வதேசரீதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சித்தாந்த முரண்பாடு ஏற்பட்டு, அதன் விளைவாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் பிளவு ஏற்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளில் சண்முகநாதன் திரிபுவாதப் பிரிவை நிராகரித்து புரட்சிகரப் பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர், அப்பிரிவின் பொதுச் செயலாளராக இருந்த சண்முகதாசன் இடது தீவிர சந்தர்ப்பவாதப் பாதையைப் பின்பற்றிய காரணத்தால், அவரை நிராகரித்துவிட்டு கட்சியின் பெரும்பான்மையினர் இலங்கை மார்க்சிச — லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சியை 1972இல் உருவாக்கியபோது, தோழர் சண்முகநாதனும் அதில் தன்னை இணைத்துக் கொண்டார். இருக்கின்ற கட்சி ஒன்றுடன் இணைந்து கொண்டால் போதுமானது என்ற கொள்கையை சண்முகநாதன் பின்பற்றுபவராக இருந்திருந்தால், அன்றே அவர் இந்த பிரிவுகளில் ஒரு நிலை எடுக்காமல் விட்டிருக்கலாம்.

இது சம்பந்தமாக அவரது நிலைப்பாடு கனடாவிலுள்ள தோழர்களுக்கு நன்கு தெரியும். ஒருமுறை இலங்கையிலுள்ள கம்யூனிஸ்ட் அணி ஒன்றுடன் நாம் உத்தியோகபூர்வமாக இணைந்து வேலை செய்தால் என்ன என்ற கேள்வி எழுந்தபோது, தோழர் சண்முகநாதன் அதை முழுவதுமாக நிராகரித்தார். அங்குள்ள இடதுசாரிக் கட்சிகளுடன் தோழமைபூர்வமான உறவுகளைக் கொண்டிருப்பதில் தவறில்லை. அது அவசியமானதும் கூட. ஆனால் அவற்றில் நாம் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் அளவுக்கு இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் உண்மையான மார்க்சிச — லெனினிச கட்சி எதுவும் இல்லை என்பதே அவரதும், கனடாவில் வாழ்கின்ற ஏனைய இலங்கைத் தோழர்களதும் நிலைப்பாடு.

எனவே, தோழர் சண்முகநாதன் கூறியதாகப் பரப்பப்பட்ட கருத்துகள் தவறானவை என்பதே உண்மையாகும்.

இது ஒருபுறமிருக்க, தோழர் சண்முகநாதன் காலமான பின்னர் கனடாவில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் கட்டுரை ஒன்றை எழுதிய, பல வருடங்களுக்கு முன்னர் தோழர் சண்முகநாதனுடன் ஒரே அமைப்பில் இருந்த ஒருவர், (பின்னர் அவர் பிற்போக்கு தமிழ் தேசியவாதத்துடன் கைகோர்த்துச் சென்றுவிட்டார்) சண்முகநாதன் மீது எவரும் செய்யத் துணியாத அபாண்டமான கருத்து ஒன்றை அவர்மீது திணித்து, அவர்மீது சேறு பூச முயன்றிருக்கிறார். அதாவது தோழர் சண்முகநாதன் தன்னுடன் ஒருமுறை கதைக்கும்போது, தமிழீழத்தை ஏற்றுக் கொண்டார் என அந்த நபர் கூறியிருக்கிறார். சண்முகநாதன் இல்லாதபடியால் இப்படியெல்லாம் அவர் பற்றி எழுதுவதற்கு இப்படியானவர்களுக்குத் துணிவு வந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.



எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம், தோழர் சண்முகநாதன் ஒருபோதும் தமிழீழம் என்ற கருதுகோளை ஏற்றுக் கொண்டவரல்ல என்பது. அவர் இலங்கை மார்க்சிச — லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் குழுவின் ஒரு உறுப்பினராக இருந்த 1975ஆம் ஆண்டுதான், அக்குழு “தமிழ் பேசும் மக்களே, தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராகப் போரிடுவீர்!” என்ற வரலாற்று முக்கியத்துவமுள்ள அறைகூவலை விடுத்தது. பின்னர் அதே ஆண்டு அக்கட்சி ‘தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி’ என்ற பரந்த வெகுஜன அமைப்பு ஒன்றை உருவாக்கியதுடன், அதன் முதலாவது பொதுச் செயலாளராக தோழர் சண்முகநாதனை நியமனம் செய்தது.

பின்னர் அம்முன்னணியில் இணைந்து வேலை செய்த சில தோழர்கள், முன்னணியில் பெயரை ‘தமிழீழ தேசிய விடுதலை முன்னணி’ எனப் பெயர் மாற்றம் செய்தனர். அப்பொழுது தமிழகத்தில் தங்கியிருந்த தோழர் சண்முகநாதனுக்கு இது தெரியாது. பெயர் மாற்றம் செய்வதற்காக நடாத்தப்பட்ட மாநாட்டு அறிக்கை கூட, இன்னொரு ஈழ விடுதலை இயக்கம் நடாத்தி வந்த தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் மூலம்தான் தோழர் சண்முகநாதனுக்குக் கிடைத்தது!

தோழர் சண்முகநாதனுக்குத் தெரியாமல் பெயர் மாற்றம் செய்து, அவரது பொதுச் செயலாளர் பதவியையும் இல்லாமல் செய்த சம்பவத்தை விட, முன்னணி தமிழீழம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக விசனமுற்ற தோழர் சண்முகநாதன், பின்னர் அந்த முன்னணியுடனான தொடர்புகளை அறுத்துக் கொண்டார். அவர் எப்பொழுதும் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் தாரக மந்திரமான, இன்றைக்கும் சரியாகப் பொருந்தக்கூடிய “தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராக” என்ற கருத்திலேயே ஊன்றி நின்றார். அதுமட்டுமல்ல, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியை மீண்டும் புனருத்தாரணம் செய்வது பற்றியும் தோழர்களுடன் கலந்துரையாடி வந்தார். அதற்காக சிறிது காலம் இலங்கையில் சென்று தங்கியிருந்து வேலை செய்யவும் ஆலோசித்திருந்தார்.

அதுமட்டுமின்றி, அவர் கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்த பின்னர் நடைபெற்ற வி.உருத்திரகுமாரனின் ‘நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான’ தேர்தலில் வாக்களிக்கும்படி அவரை உறவினர்கள், நண்பர்கள் எனச் சிலர் வலியுறுத்தியும் அவர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

நிலைமை இப்படியிருக்க, அவர் தமிழீழத்தை ஏற்றுக் கொண்டார் என்று கூறுவது எத்தகைய மோசடித்தனம்? எத்தகைய கபடத்தனம்? எத்தகைய சேறு பூசுதல்?

அதுமட்டுமின்றி, அந்தக் கட்டுரையை எழுதிய நபர், தோழர் சண்முகநாதன் கனடாவில் வசித்த காலத்தில், தனது முன்னைய மார்க்சியத் தோழர்களைச் சந்திக்க விரும்பாமல் இருந்தார் என இன்னொரு சரடையும் அவிழ்த்து விட்டுள்ளார். அவர் மார்க்சியத் தோழர்களைச் சந்திக்க விரும்பாமலா அங்கு செயல்பட்டு வருகின்ற இலங்கை இடதுசாரிகள் கூட்டமைப்பில் அங்கத்தவராக இணைந்து வேலை செய்தார்? அல்லது அங்குள்ள முற்போக்கு சக்திகளால் நடாத்தப்படுகின்ற ‘வானவில்’ என்ற பத்திரிகையின் ஆசிரிய குழு உறுப்பினராகச் செயற்பட்டார்?

இந்த மாதிரிக் கட்டுரைகளை எழுதும் நபர்கள் தமது சீரழிவுகளை நியாப்படுத்த, உண்மையான, நேர்மையான செயற்பாடுள்ள தோழர் சண்முகநாதன் போன்ற

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க…**

# முதல் சறுக்கல்... மூன்றும் சறுக்கல்... 15 ஆண்டுகள் பதறவைத்த ஜெ..!



**கா**லம் மூன்று முறை வழங்கிய கொடைகளையும் உடைத்துப் போட்டுவிட்டார் ஜெயலலிதா!

1991-ம் ஆண்டு, முதல் வாய்ப்பாக வாய்த்தது முதலமைச்சர் நாற்காலி. எதிர்க்கட்சிகளே இல்லாத சட்டமன்ற மகுடத்தை, அந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தார்கள். அந்த மன்றத்துக்குள் சபாநாயகர் ஆசனம் என்பது முதலமைச்சருக்கு எல்லாம் மூத்தது. அதில் தானே உட்கார்ந்து, தன் அருகில் சசிகலாவை உட்காரவைத்து, சபையின் நாயகனையே தனது காலில் விழவைத்து, முதல் கோணல் முற்றிலும் கோணலாகத் தொடங்கிய ஆட்சி அது.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு, இவரே எம்.ஜி.ஆராகப் பார்க்கப்பட்டார். இரட்டை இலை, மாயாஜால மந்திரக் கம்பளமாக மக்கள் மனதை மாற்றிவைத்திருந்தது. ராஜீவ் காந்தியை மனித வெடிகுண்டு சிதைத்தது அனுதாப வாக்குகளை அள்ளிக்கொடுத்தது. மக்களாட்சியை மறந்து ஹஜெ. ஆட்சி' நடத்திய காலம்தான் 1991-96 காலகட்டம்.

போயஸ் கார்டனில் இருந்து கோட்டைக்குக் கிளம்புகிறார் என்றால், முக்கால் மணி நேரத்துக்கு முன்னரே வாகனங்களை நிறுத்தி, ஓட்டுபோட்ட மக்களை வெயிலில் வறுத்தெடுத்தார்கள். மனிதத் தலைகள், எல்லா இடங்களிலும் காத்திருந்தன் காலில் விழுந்தன் கன்னத்தில் போட்டுக்கொண்டன. இவரே தன்னை அகிலாண்டேஸ்வரியாகவும் கன்னிமேரியாகவும் நினைத்துக்கொண்டார். அவர் நினைப்பதையே சுவரொட்டிகளாக ஒட்டினார்கள்.

ஜெயலலிதாவைப் பார்க்க முடியாது. அவர் என்ன நினைக்கிறார் என்பதை சசிகலாவின் உறவுகளே பொழிப்புரை வழங்கினார்கள். அரசு கஜானாவில் இருந்து எடுத்து மக்களுக்கு நன்மைசெய்வது என்பது மாறி, அரசு கஜானாவைத் தன்வசப் படுத்துவது, கஜானாவுக்கு வரவேண்டியதை தன் பக்கம் திருப்புவது என்றானது. செத்த பிணத்தை எரிக்கும் வசதிக்கான சுடுகாட்டு மேற்கூரை போடுவதில் தொடங்கி, பள்ளி மாணவர்களுக்கு செருப்பு வழங்குவது வரை... எல்லாவற்றிலும் ஊழல், ஊழல், ஊழலோ ஊழல்!

அராஜகம், சர்வசாதாரணம். கவர்னர் சென்னாரெட்டியே திண்டிவனத்தில் திணறிப் போனார். திருச்சி விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தாக்கப்பட்டார்.

டி.என்.சேஷனால் சென்னை விமான நிலையத்தில் இருந்து வெளியே வரவும் முடியவில்லை் தங்கியிருந்த விடுதிக்குள் போகவும் முடியவில்லை. வழக்குரைஞர் சண்முகசுந்தரம் வெட்டப்பட்டார். வழக்குரைஞர் விஜயன் மீது தாக்குதல். முன்னாள் அமைச்சர் எஸ்.ஆர்.ராதா எதற்காகவோ தாக்கப்பட்டார். சந்திரலேகா மீது ஆசிட் வீசியது அராஜகத்தின் உச்சம். சுப்பிரமணியன் சுவாமிக்கு நடந்தது அசிங்கத்தின் உச்சம். சசிகலாவின் அக்கா மகன் வி.என்.சுதாகரனை வளர்ப்பு மகனாகத் தத்தெடுத்து, கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இந்தியாவே பிரமிக்கத்தக்க திருமணத்தை நடத்தினார். இன்று அது குறித்த உச்ச நீதிமன்ற விசாரணையும் இந்தியாவே பிரமிக்கத்தக்க வகையில் நடந்துகொண்டிருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் எதிர்க்கட்சிகளே இல்லாத சபையை அமைத்த ஜெயலலிதா, 1996-ம் ஆண்டு தேர்தலில், தானே இல்லாத சபை அமையவும் காரணம் ஆனார். 234-ல் 4 இடங்களில் மட்டுமே அ.தி.மு.க வென்றது. ஜெயலலிதாவே தோற்றுப்போனார்.

வழக்கம்போல் சசிகலா மீது பழியைப்போட்டு, அவரைத் தள்ளிவைத்தார் ஜெயலலிதா. தான் மாறிவிட்டதாகச் சொன்னார். 2001-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் எல்லா கட்சிகளையும் சரிசமமாக மதித்து தனது கூட்டணிக்குள்

சேர்த்துக்கொண்டதன் மூலமாக வெற்றியைத் தொட்டார். இதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இவர் மீதும் இவரது சகாக்கள் மீதும் 40-க்கும் மேற்பட்ட ஊழல் வழக்குகள் பாய்ச்சப்பட்டு, மூன்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஜெயலலிதாவே கைது செய்யப்பட்டு, சென்னை மத்திய சிறையில் 28 நாட்கள் வைக்கப்பட்டார்.

இந்த (1996-2001) ஐந்து ஆண்டுகால அவஸ்தை, ஜெயலலிதாவின் மனதை மாற்றிப் புதுப்பித் திருக்கும் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். இல்லை. அந்த அவஸ்தைக்குப் பழிவாங்கவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார். பாலம் கட்டுவதில் ஊழல் நடந்ததாகச் சொல்லி, நள்ளிரவில் கருணாநிதியின் கழுத்தைப் பிடித்துத் தூக்கிய காட்சி... அடுத்து ஜெயலலிதா என்னென்ன செய்யப்போகிறாரோ என்ற அச்சத்தை விதைத்தது. தி.மு.க ஊர்வலத்தில் போலீஸ்காரர்களை முன்னே நிறுத்தி, ரௌடிகளை பின்னே நிறுத்தி நடத்திய தாக்குதலில் பத்திரிகையாளர்கள் உள்பட பலரது மண்டைகள் உடைந்தன. இவர்கள் எதையும் செய்யக்கூடியவர்கள் என்ற பீதி கிளம்பியது.

போராட்டம் நடத்திய அரசு ஊழியர்களை பேசிச் சமாளிக்க மனம் இல்லாமல், இரண்டு லட்சம் பேரை டிஸ்மிஸ் செய்து... டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களுக்குப் பதிலாக புதிய ஆட்களை வேலைக்கு எடுத்து... ஹசர்க்கஸ் ரிங் மாஸ்டரைப்'போல சாட்டைகொண்டு அடித்து... (இது ஜெயலலிதாவின் வார்த்தைகள் - 9.5.2002 சட்டமன்றத்தில் பேசியது!) ஆடித் தீர்த்தார். லட்சக்கணக்கானவர்களை ஒரே நாளில் பணிநீக்கம் செய்ததன் மூலமாக தன்னை, தன்னால்கூட கன்ட்ரோல் செய்ய முடியாது என்பதைக் காட்டினார். விடுதலைப்புலிகளின் தீவிர எதிர்ப்பாளராக மாறி, வைகோ, நெடுமாறன், சுப.வீரபாண்டியன், சாகுல் ஹமீது, தாயப்பன் போன்றோரை 'பொடா' சட்டத்தில் கைதுசெய்து பல மாதங்கள் சிறையில் அடைத்தார்.

இந்தியாவில் எங்கும் இல்லாத வகையில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். '2,000 ரூபாய் கொடுத்து மதமாற்றம் செய்கிறார்கள்' எனக் கொச்சைப்படுத்தினார். பல்லாயிரக்கணக்கான சிறுதெய்வங்களுக்கு ஆடு, கோழி பலியிட்டு வணங்குவது பல நூற்றாண்டு காலமாக வழக்கத்தில் இருப்பது. ஆடு, கோழி பலியிடக் கூடாது என்று தடை செய்வதன் மூலமாக ஒற்றைப் பெருந்தெய்வத்தை நோக்கி மக்களை வதைக்கும் காரியத்தைச் செய்தார்.

'ராஜீவ் காந்தியைக் கொன்ற விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களுடன் சோனியா கூட்டணி வைத்துள்ளார். அவர் இத்தாலிக்காரரர் என்பதால், இந்தியப் பற்று இருக்காது. அதை எதிர்பார்க்க முடியாது. ஆனால், பதிபக்தியாவது இருக்க வேண்டாமா?' (13.3.2004) என்று அதிதீவிர விடுதலைப்புலி எதிர்ப்பாளராக தன்னைக் காட்டிக்கொண்ட ஜெயலலிதா, புலித்தோழன் வைகோவை இரண்டே ஆண்டுகளில் தனது கூட்டணிக்குள் சேர்த்துக்கொண்டார்.

இரண்டு முறை பெரும் விபத்தைச் சந்தித்தவர்கள், அப்புறம் மிக மிக எச்சரிக்கையாக இருப்பார்கள். உண்மைதான், ரொம்பவே எச்சரிக்கையாகவே இருந்துவிட்டார் ஜெயலலிதா. வாகனத்தை ஆன் செய்துவிட்டு ஸ்டீயரிங் பிடித்தபடி அப்படியே உட்கார்ந்து விட்டார். முதல் ஓர் ஆண்டு வெற்றிக் கொண்டாட்டங்களில் கழிந்தது. அடுத்த ஓர் ஆண்டு பெங்களூரு விசாரணையில் தொடர்ந்தது. சிறை, மேல்முறையீடு, யாகம், கோயில், பூஜை-புனஸ்காரங்களில் அடுத்த ஓர் ஆண்டு முடிந்தது. உடல்நலம் குறைந்தது. அதில் மனநலமும் சேர்ந்தது. கடந்த மூன்று மாதங்களில் அவசர அவசரமாக தினமும் ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டு... இதோ ஹெலிகாப்டரில் ஏறி... நான்காவது வாய்ப்புக்காகப் பறக்க ஆரம்பித்து விட்டார். செயல்படலாம் என்று நினைத்த நேரத்தில் உடலும் மனமும் ஒத்துழைக்கவில்லை.

ஜெயலலிதாவுக்குப் புரிகிற மாதிரி சொல்ல வேண்டுமானால், 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது'.

தி.மு.க வாகனத்துக்கு 100 ஸ்டீயரிங்குகள். ஆளாளுக்கு வண்டியைத் திருப்பி கருணாநிதியையே கசக்கிப்பிழிவார்கள். ஆனால், ஜெயலலிதாவுக்கு அந்த அவஸ்தை இல்லை. அவரால், அ.தி.மு.க-வை மிகத் திறம்பட செலுத்தியிருக்க முடியும். ஆனால், மூன்று முறையும் கோட்டைவிட்டுவிட்டார். கோபுரத்தைப் பார்த்ததும் கன்னத்தில் போட்டுக்கொள்வது மாதிரி இரட்டை இலையைப் பார்த்ததும் வாக்கு குத்தத் தயாரான லட்சக்கணக்கான மக்கள் கூட்டத்துக்கு நியாயம் செய்யாமல், ஒரு குறிப்பிட்ட குடும்பத்துக்கு சாதகமானதாக கட்சியையும் ஆட்சியையும் கொண்டு செல்லத்தான் அவருக்கு வாக்குகள் வாரி இறைக்கப்பட்டனவா?

'மக்களால் நான் மக்களுக்காக நான்' என்கிறார் ஜெயலலிதா. 'மக்களால் நான்' என்பது உண்மை. 'மக்களுக்காக நான்' என்பது உண்மையா?

- ப.திருமாவேலன்

நன்றி: விகடன்

---

ஒரு நாட்டில் மட்டுமல்லாது முழு உலகிலும் நாம் பூர்ஷுவா வர்க்கத்தைத் தூக்கியெறிந்து இறுதியாக வெற்றி கொண்டு பலஹீனம் செய்த பிறகுதான் யுத்தங்கள் சாத்தியமற்றனவாகும். சோசலிச மாற்றத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததான பெரும் போராட்டம் தேவைப்படும் மிகக்கடின பணியான பூர்ஷுவா வர்க்கத்தின் எதிர்ப்பைத் தகர்த்துத் தவீடு பொடியாக்கும் பணியைத் தவிர்த்து ஒதுங்குவதோ அல்லது முலாம் பூசி மறைப்பதோ விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் மிகவும் தவறாகும்-சிறிதும் புரட்சித்தன்மையற்றதாகும்.

–லெனின்

# ஏப்ரல் முட்டாள் தினம்

பல நாடுகளில் முதலாம் திகதியை ஏப்ரல் ‘முட்டாள்கள் தின’மாகக் கொண்டாடி வருகிறார்கள். இதில் சுவையான விடயமென்னவெனில், பலர் தாம் ஏன் இத்தினத்தை முட்டாள்கள் தினமாகக் கொண்டாடுகிறோம் எனத் தெரியாமலேயே கொண்டாடி வருவதுதான். ஆனால் இத்தினம் உருவானதற்கு ஒரு வரலாறு இருக்கின்றது.

அதாவது, 17ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் பல ஐரோப்பிய நாடுகளில் ஏப்ரல் முதலாம் திகதியைத்தான் புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். பின்னர் புதுவருடக் கொண்டாட்டம் ஜனவரி முதலாம் திகதிக்கு மாற்றப்பட்டது. ஆனால் பழமையை விரும்பிய சிலர் தொடர்ந்தும் ஏப்ரல் முதலாம் திகதியையே புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். அவ்வாறு கொண்டாடியோரைக் கேலி செய்வதற்காக, ஜனவரி முதலாம் திகதியைப் புதுவருட தினமாகக் கொண்டாடியோர் அவர்களை “முட்டாள்கள்” என்றும், அத்தினத்தை “முட்டாள்கள் தினம்” என்றும் அழைத்தனர்.

அதுவே பின்னர் ஏப்ரல் முட்டாள்கள் தினமாக வரலாற்றில் இடம் பிடித்துவிட்டது.

# அம்மா – ஐயா தந்திரம்!

தமிழகத்தில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி அடைந்த தோல்வி யாரும் எதிர்பார்க்காதது. 6 கட்சிகள் கொண்ட பலமான கூட்டணியாக அது இருந்தும் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெறத் தவறிவிட்டது.

இதில் ஒரு சுவாரசியமான விடயம் என்னவெனில், அக்கூட்டணியில் போட்டியிட்டவர்களில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இருந்தும், வெறுமனே 87 வாக்குகள்




வித்தியாசத்தில் தோற்றுவிட்டார். அவர் போட்டியிட்ட காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அவரது பெயரைக் கொண்ட டி.திருமாவளவன் என்றொருவரை ஆதிக்கக் கட்சிகள் சுயேட்சையாகப் போட்டியிட வைத்து, தொல்திருமாவளவனின் வெற்றி வாய்ப்பைத் திட்டமிட்டுப் பறித்துவிட்டனர். அந்த திருமாவளவன் வெறுமனே 289 வாக்குகள் பெற்று உண்மைத் திருமாவளவனின் வெற்றி வாய்ப்பைப் பறித்துவிட்டார்.

# பார்க்கின்ஸன் நோய்

உலகில் பலர் ‘பார்க்கின்ஸன்’ என்ற நோயால் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நோய் உள்ளவர்களுக்கு முதலில் கை, கால் நடுக்கம் ஏற்பட்டு, பின்னர் அவை செயலிழந்து போவதுண்டு. மூளையிலும் பாதிப்பு ஏற்படும். இந்நோயாளிகள் எழுந்து நடமாட முடியாதவர்களாக பெரும்பாலும் படுத்த படுக்கையாகவே இருப்பர். இந்நோயை ஆரம்பத்திலேயே இனம் கண்டு கொண்டு, தகுந்த சிகிச்சை அளித்தால், நோயிலிருந்து விடுபடக்கூடிய வாய்ப்பு உண்டு.

James Parkinson என்பவர் இந்த நோய் பற்றி ஆராய்ச்சி செய்ததால், அவரது பெயராலேயே இந்த நோய் பார்க்கின்ஸன் நோய் என அழைக்கப்படுகிறது.

# *கம்யூனிஸ்ட்டுகளின் கதி!*

கம்யூனிஸ்ட் கட்சிகள், சுதந்திரம் பெற்றது முதலே தொடர்ந்து சட்டப் பேரவையில் இடம் பெற்று வந்தன. இந்தமுறை, இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் அந்த வாய்ப்பு பறிபோய்விட்டது. துவேசம் இல்லாமல் மக்கள் பிரச்சினைகளை மட்டும் பேசக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில், ஒரு எம்.எல்.ஏ. கூட இல்லாமல் போனது துரதிர்ஸ்டவசமானது.

**– துக்ளக்**

**குறிப்பு:** இலங்கையிலும் 1977ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து ‘ஐக்கிய சோசலிச முன்னணி’ என்ற பெயரில் போட்டியிட்ட இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றம் செல்லத் தவறிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் கூரையில் அவ்வையின் பொன்மொழி!

“உலகின் கூரை” (Roof of the World) என வர்ணிக்கப்படும் சீனாவின் தீபெத் மாகாணமே, மக்கள் வசிக்கும் உலகின் மிக உயர்ந்த பகுதியாகும். தீபெத்தின் தலைநகராமாக லாசா இருந்து வருகிறது.

முன்பு தீபெத்துக்கு வெளிநாட்டவர்கள் செல்வது மிகவும் குறைவு. ஆனால் சீனா வெளியுலகிற்கு அதைத் திறந்துவிட்ட பின்னர், அங்கு உலகம் முழுவதுமிருந்து சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றனர்.

அவ்வாறு சென்று வந்த ஒருவர் சொன்ன தகவலின்படி, லாசா விமான நிலையத்தில் தமிழின் தொல் கவிஞர்களில் ஒருவரான அவ்வையார் அருளிய, “கற்றது கையளவு, கற்காதது கடலளவு” என்ற வாசகம் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளதாம்!

# நகரங்களை நோக்கி…

ஐக்கிய நாடுகள் உணவு விவசாய அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு கணிப்பீட்டின்படி, 2025-ம் ஆண்டில் உலக சனத்தொகையில் சுமார் 3.5 பில்லியன் (350 கோடி) மக்கள் நகரங்களில் வாழ்வார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

# ‘கின்னஸ்’ சாதனை படைத்தார் பி.சுசிலா!

80 வயது நிரம்பிய பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகி பி.சுசிலா கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

1953இல் முதன்முதலாகப் பாட ஆரம்பித்த சுசிலா, தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி உட்பட ஆறு மொழிகளில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இதில் 17 ஆயிரத்து, 695 பாடல்களைத் தனியாகப் பாடியுள்ளார். இவ்வளவு தொகைப் பாடல்களை உலகில் யாருமே தனியாகப் பாடியதில்லை. அதற்காகவே அவரது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவிலுள்ள சுசிலாவின் ரசிகர்கள், ‘சுசிலா – ஓஆர்ஜி” என்ற இணையத்தளம் மூலம் மேற்கொண்ட ஆய்வில்தான் சுசிலாவின் இந்தச் சாதனையைக் கண்டு பிடித்துள்ளனர்.

ஏற்கெனவே சுசிலாவுக்கு பத்மபூசன் விருது, ஆறுமுறை தேசிய விருதுகள், 10க்கும் மேற்பட்ட மாநில விருதுகள், கலைமாமணி விருது உட்பட பல விருதுகள் கிடைத்திருக்கின்றன.

# இலங்கையிலும் இந்துத்துவாவா?

இந்தியாவின் மத்திய பிரதேச அரசாங்கம் இலங்கையில் இதிகாச கதாநாயகன் ராமனின் மனைவி சீதைக்கு பிரமாண்டமான அளவில் ஒரு கோவில் எழுப்பவுள்ளது. இதற்காக ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. (ஏற்கெனவே மலையகத்தில் சீதைக்கு ஒரு கோவில் இருக்கிறது)

இந்தக் கோவில் அமைப்பதற்கான வேண்டுகோள் 2012இல் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியாவின் சான்சிப் பிரதேசத்தில் பௌத்த கற்கைகளுக்கான பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்குச் சென்ற வேளையில் மத்திய பிதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகானால் விடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவர் இலங்கைக்கு விஜயம் செய்து கோவில் அமைப்பதற்கான இடத்தைப் பார்த்துச் சென்றிருந்தார். பெரும்பாலும் சீதை தீக்குளித்ததாகச் சொல்லப்படும் இடத்திலேயே இக்கோவில் அமையவுள்ளது.

இந்தக் கோவில் அமைக்கும் விடயத்தில் இந்துத்துவ தலைமை வெறி அமைப்பான ஆர்எஸ்எஸ்சின் தலைவர் ராம் மாதவ் பெரும் அக்கறை காட்டுவதாகத் தெரிய வந்துள்ளது. இலங்கையிலும் இந்துத்துவ வெறியைக் கிளறுவதற்கான அத்திபாரமோ?

# வேர்க்கடலையின் மகத்துவம்

“கச்சான்” என நாம் அழைக்கும் வேர்க்கடலையில் 30 விதமான ஊட்டச் சத்துக்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நமது உடலுக்குத் தேவையான புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் இதில் உள்ளது. இதில் இருக்கும் மக்னீசியம், இன்சுலினைச் சுரக்கச் செய்யும் ஹார்மோனைத் துரிதப்படுத்தி சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டிருப்பதால், இது சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்தது எனத் தெரிய வருகிறது. அத்துடன் சோடியத்தின் அளவு குறைவாக இருப்பதால், இரத்த அழுத்தம் குறைந்து, இரத்த ஓட்டம் சீராகும். அதன் காரணமாக தினமும் 50 கிராம் வேர்க்கடலை சாப்பிட்டு வருவது உடலுக்கு நன்மை பயக்கும் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஆர்க்டிக்கில் ஓர் அதிசயம்!

ஆர்க்டிக் வட்டத்தில் அமைந்துள்ளது ரஸ்யாவின் முர்மென்ஸ்க் நகரம். இங்கு 3 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். இங்கு டிசம்பர் 2ஆம் திகதியிலிருந்து ஜனவரி 10ஆம் திகதி வரை சூரிய உதயம் கிடையாது. இந்த 40 நாட்களை ‘போலார் நைற்’ (polar night) என அழைக்கின்றனா. அதேபோல் மே 22 முதல் யூலை 23 வரை சூரியன் மறைவதே இல்லை. இந்த நாட்களை ‘போலார் டே’ (polar day) என அழைக்கின்றனர். உலகில் இங்கு மட்டுமே இந்த அதிசயம் நிகழ்கின்றது.

# புற்று நோய்க்கான காரணிகள்

ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதும் 14 மில்லியன் மக்கள் புற்றுநோய் நோயாளிகளாகக் கண்டறியப்படுகின்றனர். அதில் பாதியளவு நோயாளிகள் போதியளவு சிகிச்சையின்றி மரணிக்கின்றனர். புற்றுநோய் பின்வரும் காரணிகளால் ஏற்படுகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

- புகையிலைப் பொருட்களைப் புகைப்பதாலும், மெல்வதாலும் (31 வீதம் பேர்)
- சரியான உணவுப் பழக்கமின்மையாலும், உடல் பருமனாலும் (31 வீதம் பேர்)
- உடல் பயிற்சியின்மையால் (3 வீதம் பேர்)
- மிதமிஞ்சிய மது பாவனையால் (2 வீதம் பேர்)
- கூடுதலான UV (ultraviolet radiation) வெளிப்படுத்தலால் (2 வீதம் பேர்)

# ஆல் – மூங்கில் – துளசி!

பொதுவாக தாவரங்கள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே காற்றிலுள்ள கரியமிலவாயுவை எடுத்துக்கொண்டு ஆக்சிஜனை தரும். ஆனால் 24 மணி நேரமும் கரியமிலவாயுவை எடுத்துக்கொண்டு ஆக்சிஜனை வெளியிடும் தாவரங்கள் அரச மரம் மற்றும் மூங்கில் மரங்கள் மட்டுமே. துளசி 20 மணி நேரம் ஆக்சிஜனையும், நான்கு மணி நேரம் ஓசோனையும் கொடுத்து வளிமண்டலத்தைப் பாதுகாக்கிறது.

## தமிழக தேர்தல் முடிவுகள்:

# மூன்றாவது அணி என்ற மாயை கலைந்தது!

**சுப்பராஜன்**

நடந்து முடிந்த தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் பலருக்கும் பலவிதமான படிப்பினைகளைக் கொடுத்துள்ளது. இந்தத் தேர்தல் ஐந்துமுனை, ஆறுமுனைப் போட்டி என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டிருந்த போதும், வழமைபோல அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையிலான இருமுனைப் போட்டியாகவே முடிந்திருக்கிறது. ஜெயலலிதா அதிக ஆசனங்களைப் பெற்று திரும்பவும் ஆட்சி அமைத்திருக்கின்ற போதும், அவரது கட்சி பெற்ற மொத்த வாக்குகள் தி.மு.க. பெற்றதைவிட 1.5 வீதமே அதிகம். ஒருவேளை மு.கருணாநிதி பெரிதும் விரும்பியது போல, விஜயகாந்தின் கட்சி அவருடன் கூட்டுச் சேர்ந்திருந்தால், ஜெயலலிதா மண்கவ்வியும் இருக்கக்கூடும்.

எப்படியிருந்த போதும், ஜெயலலிதா மீது ஊழல் வழக்குகள் இருந்தும், அவரது ஆட்சியில் ஊழலும், மோசடியும், அதிகாரத் துஸ்பிரயோகமும் கொடிகட்டிப் பறப்பதாகக் குற்றச்சாட்டுகள் இருந்தும், அவரே மீண்டும் வெற்றி (134 ஆசனங்கள்) பெற்றிருக்கிறார். அதேபோல கருணாநிதியின் குடும்பத்தினர் மீதும், கட்சியினர் சிலர் மீதும் ஊழல் வழக்குகள் இருந்தும் அவரது கட்சியே இரண்டாவதாக அதிக ஆசனங்கள் (89 ஆசனங்கள்) பெற்று பிரதான எதிர்க்கட்சி ஆகியுள்ளது.

இந்த இரண்டு தலைவர்களும் தொடர்ச்சியாக பலவிதமான மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டும் கூட, அவர்களுக்கே மக்கள் வாக்களித்துள்ளனர். இதற்கான காரணம் என்ன என்பது தனியாக ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஆனால், ஒரு விடயம் மட்டும் திரும்பவும் தெளிவாகியுள்ளது. அதாவது, ‘மூன்றாவது அணி’ என்பது தவறான ஒரு கருதுகோள் என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியுள்ளது. தமிழ்நாட்டுத் தேர்தலில் மட்டுமின்றி, தேசிய அளவிலும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் இதற்கு உதாரணங்கள் உண்டு.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1967இற்குப் பின்னர், 49 வருடங்களாக தி.மு.க, அ.தி.மு.க என்ற இரு திராவிடக் கட்சிகளுமே மாறிமாறி ஆட்சி செய்து வந்துள்ளன. ஆரம்பத்தில் ஈ.வெ.ரா பெரியார் தொடக்கிய திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம் என்று சொல்லிக்கொண்டு, தீண்டாமை ஒழிப்பு, சீதன ஒழிப்பு, கடவுள் மறுப்பு, சமூக சமத்துவம் போன்ற கொள்கைகளுக்காகப் போராடினாலும், அண்ணாத்துரை தி.மு.கவை உருவாக்கி அது ஆட்சி அதிகாரத்துக்கு வந்தபின்னர், அந்தக் கொள்கைகளுக்கு நேர் எதிர்மாறான செயல்களில் ஈடுபட்டு, அகில இந்தியாவிலும் முதல்தரமான ஊழல், மோசடிக் கட்சிகள் எனப் பெயரெடுத்தன.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற உணர்வு தமிழகத்தின் பெருவாரியான தமிழக மக்களிடமும், சில அரசியல் கட்சிகளிடமும் காலத்துக்குக் காலம் ஏற்பட்டதின் விளைவே இந்த மூன்றாவது அணி. இந்தமுறைத் தேர்தலுக்கு முன்னரும் ஆட்சியிலுள்ள அ.தி.மு.கவைத் தோற்கடிக்க வேண்டும், அதேநேரத்தில் இன்னொரு ஊழல் கட்சியான தி.மு.கவும் வெற்றிபெற விடக்கூடாது என்ற கருத்து பலமாக நிலவியது. இம்முறை தமிழக அரசியலில் மாற்றம் ஒன்று வந்தே தீரும் என பிரபலமான ஊடகங்கள் கூட ஆரூடம் கூறின. ஆனால் எல்லாம் பொய்த்துப் போய் விட்டன.

இரண்டு திராவிடக் கட்சிகளும் வெற்றி பெற்றது மட்டுமின்றி, ஏனைய கூட்டணிகளின் கட்சிகளின் தலைவர்கள் கூட ஒரு தொகுதியிலாவது வெற்றி



பெறாதது பலத்த அதிர்வலைகளையும், ஆய்வுக்குரிய நிலைமைகளையும் தோற்றுவித்துள்ளது. மக்கள் மாற்றத்தை விரும்பியும், அதைச் செய்யாதது ஏன் என்ற கேள்விக்கு விடை காண்பது அவசியம்.

முன்பும் தமிழ்நாட்டில் இடதுசாரிகள் இரண்டு திராவிடக் கட்சிகளுக்கெதிராகவும் மூன்றாவது அணி உருவாக்கிய போதெல்லாம் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை. அகில இந்திய அளவிலும் இடதுசாரிகள் எடுத்த இம்மாதிரியான முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறவில்லை.

இந்தியா மட்டுமல்ல, இலங்கையை எடுத்துக் கொண்டாலும், இதுதான் நிலைமை. உதாரணமாக, 1977இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இருந்து பிரிந்த இடதுசாரிக் கட்சிகள், அக்கட்சிக்கு எதிராகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும், ‘ஐக்கிய சோசலிச முன்னணி’ என்ற பெயரில் மூன்றாவது அணி ஒன்றை உருவாக்கிப் போட்டியிட்டன. ஆனால், தேர்தலில் மொத்தமாக 5 இலட்சம் வரையிலான வாக்குகள் பெற்றும், வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு ஒரு இடதுசாரி தன்னும் தெரிவாகவில்லை.

இலங்கையின் தேசிய அரசியலில் மூன்றாவது சக்தி என வர்ணிக்கப்படும் ஜே.வி.பியின் வரலாறும் இதுவே. அது முதலில் யாருடனும் கூட்டுச் சேராமல் போட்டியிட்டு ஒரேயொரு

தொகுதியில் மட்டும்தான் வெற்றி பெற்றது. பின்னர் சந்திரிக தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் உடன்பாடு கண்டதால், 39 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் புரிந்துணர்வுடன் தனித்துப் போட்டியிட்டு 6 ஆசனங்கள் மட்டுமே பெற்றது. விகிதாசாரத் தேர்தல் முறை இல்லாவிட்டால், ஜே.வி.பிக்கு ஒன்றுமே கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

தமிழர் அரசியலிலும் இதுதான் நிலைமை. தமிழரசு – தமிழ் காங்கிரஸ் போட்டி அரசியல் முடிவுக்கு வந்து, அவை இரண்டும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய பின்னர், சிறிது காலம் வேறு கட்சிகளுக்கு இடம் இல்லாமல் இருந்தது. ஆனாலும் அவர்களுக்கான எதிர்ப்பு இருந்துகொண்டே வந்தது. அதற்கு ஏதோ ஒரு வகையில் செயல் வடிவம் கொடுத்தது ஈ.பி.டி.பி மட்டுமே. அதன் மூலம் திரும்பவும் தமிழர்கள் மத்தியில் இரு கட்சி அரசியல் உருவாகியுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரை, இன்றைய நிலையில் பிரதான அரசியல் அணி தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. கூட்டமைப்புக்கு எதிரான பிரதான அமைப்பாக ஈ.பி.டி.பி. மட்டுமே உள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்புக்கும், ஈ.பி.டி.பிக்கும் எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் மூன்றாவது அணி ஒன்று அமைக்கப்பட்டதாயினும், அது மிகச் சொற்ப வாக்குகளே பெற்றது. அவர்கள் தீவிர தமிழ் தேசியம் பேசிய போதிலும், அவர்களை ஆதரிக்காத தமிழ் மக்கள், அரசாங்கத்தின் அடிவருடிக் கட்சி என இகழப்பட்ட ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்தே ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்து கூட்டமைப்புக்கு எதிரான அங்கீகாரத்தை அக்கட்சிக்கு வழங்கினர்.

தமிழ் பகுதி அரசியலின் இந்த யதார்த்தத்தைப் புரிந்து



கொண்டதின் காரணமாகவே, வீ.ஆனந்தசங்கரி போன்ற மூத்த அரசியல்வாதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக ஈ.பி.டி.பி கட்சியை உள்ளடக்கி புதிய முன்னணி ஒன்றை உருவாக்கி உள்ளனர். இந்த அணியில் மேலும் மாற்றுக் கருத்துள்ள தமிழ் கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும் உள் வாங்கப்பட வேண்டும் என்பது வேறு விடயம்.

இந்தியாவின் இன்னொரு மாநிலமான மேற்கு வங்கத்தில் அண்மையில் நடந்த தேர்தலை எடுத்துப் பார்க்கையிலும் இந்த உண்மை புலப்படும். அங்கு பதவியில் உள்ள மம்தா பனர்ஜியின் அரைப் பாசிச அரசுக்கு எதிராக இடதுசாரிகளும், காங்கிரசும் பிரிந்து நின்று போட்டியிட்டிருந்தால், இப்போது சந்தித்துள்ளதை விட மோசமான தோல்வியைத்தான் சந்தித்திருப்பர். இதை இன்னொரு வகையில் பார்த்தால், கடந்த இந்திய நாடாளுமன்றத் தோதலில், மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக, காங்கிரசும், இடதுசாரிகளும் இரு வேறு அணிகளாகப் பிரிந்து நின்று போட்டியிட்டதால்தான், காங்கிரசும் தோற்று, இடதுசாரிகளும் படு மோசமான தோல்வியைச் சந்தித்து, மோடி அமோக வெற்றி பெற முடிந்தது.

சில வேளைகளில், தேர்தல்களில் எதிரும் புதிருமாகப் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளும் போசமானவையாக இருப்பதுண்டு. ஆனாலும், அதில் ஒன்றுதான் மிகவும் மோசமான கட்சியாக இருக்கும். அப்படிப் பார்த்தால், தமிழகத் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு பிரதான கட்சிகளான அ.தி.மு.கவும் தி.மு.கவும் மோசமான கட்சிகள்தான். ஆனால், அந்த இரு கட்சிகளுக்கிடையிலும் உள்ள வாக்கு வித்தியாசத்தை எடுத்துப் பார்த்தால், வெற்றி பெற்ற அ.தி.மு.க. கூட்டணியை விட, தி.மு.க. கூட்டணி வெறுமனே 1.5 வீத வாக்குகள்தான் குறைவாகப் பெற்றுள்ளது. இதிலிருந்து மக்கள் அ.தி.மு.க. ஆட்சி மீது அதிருப்தியுடன் இருந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

இந்த நிலைமையை, மக்கள் நலக் கூட்டணி – தே.தி.மு.க. – தமிழக காங்கிரஸ் அணி புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. உண்மையில் அவர்கள் செய்திருக்க வேண்டியது, தி.மு.கவுடன் தொகுதி உடன்பாடு செய்திருக்க வேண்டும். தி.மு.கவும் ஊழல் கட்சி என்றாலும், அ.தி.மு.கவுடன் ஒப்பிடுகையில், ஓரளவு பரவாயில்லை எனச் சொல்லலாம். அ.தி.மு.க. எம்.ஜீஆரினால் தொடங்கப்பட்டதாக இருந்தாலும், அந்தக் கட்சியை இன்று சுவீகாரம் எடுத்து வைத்திருக்கின்ற ஜெயலலிதா அவரின் எந்தக் கொள்கையையும் பின்பற்றுபவராக இல்லை.



அதுமட்டுமின்றி, ஜெயலலிதா தலைமையிலான இன்றைய அ.தி.மு.க, கொள்கை அடிப்படையில் பா.ஜ.கவின் உண்மையான தமிழகப் பிரதிநிதியாகவே இருக்கின்றது. அதன் இந்துத்துவ பார்ப்பனப் பின்னணி, மக்கள் விரோதச் செயற்பாடுகள், அதன் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆதரவு (ஓபாமா ஆட்சியில் வெளிவிவகாரச் செயலராக இருந்த கிலாரி

கிளின்டன் இந்தியாவுக்குச் சென்ற போது இரண்டு வலதுசாரி முதலமைச்சர்களான மேற்கு வங்கத்தில் மம்தா பனர்ஜியையும், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவையும்தான் தேடிச் சென்று சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது) என்பன, ஜெயலலிதா ஆட்சியின் அரசியல் பின்னணியை எடுத்துக் காட்டுவன. கருணாநிதி பா.ஜ.கவுடன் கொள்ளும் உறவு பெரும்பாலும், பதவி நோக்கம் கொண்ட சந்தர்ப்பவாத ரீதியிலானதாகும்.

மக்கள் நலக் கூட்டணி தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்திருந்தால், இரண்டு விடயங்களைச் சாதித்திருக்க முடியும். ஒன்று, ஊழல்கார, எதேச்சாதிகார, இந்துத்துவ ஆதரவு அ.தி.மு.க. ஆட்சியை அகற்றியிருக்க முடியும். மற்றது, மக்கள் நலக் கூட்டணியில் உள்ள அத்தனை கட்சிகளும் பேரப் பேச்சின் மூலம் கணிசமான தொகுதிகளைப் பெற்று, தேவை ஏற்பட்டால் பின்னர் தி.மு.க. ஆட்சிக்கான ஆதரவை திரும்பப் பெற்றுக்கொண்டு, பலமான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டிருக்க முடியும்.

தி.மு.கவுடன் கூட்டுச் சேருவதின் மூலம், ஒரு ஊழல் ஆட்சியை அகற்றிவிட்டு. இன்னொரு ஊழல் ஆட்சிக்குத் துணை போவதா எனச் சிலர் எண்ணக்கூடும். அரசியலில் சில வேளைகளில், சில தந்திரோபாயங்கள் தவிர்க்க முடியாதவை. அதுவும் மத்தியில் மிக மோசமான ஏகாதிபத்திய சார்பு, இந்துத்துவ பாசிச கட்சியான பா.ஜ.கவின் ஆட்சி இருக்கையில், கிட்டத்தட்ட அதே ஒத்த தன்மையுள்ள அ.தி.மு.க. ஆட்சியைத் தமிழகத்தில் தொடர விடுவது, முழு நாட்டுக்கும் தமிழகத்துக்கும் ஆபத்தானது. எனவே, சில தற்காலிக ஏற்பாடுகளுக்காக சில தந்திரோபாயங்களைக் கையாள்வதில் தவறு இல்லை.

இந்த விடயங்களை அலசிப் பார்க்கையில், மக்கள் நலக் கூட்டணி – தே.மு.தி.க. – தமிழக காங்கிரஸ் அணியினர் இந்தத் தேர்தலில் எடுத்த அணுகுமுறை தவறானது. அது மட்டுமல்ல, மூன்றாவது அணி என்ற கருத்து ஒரு வெறும் மாயை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இயற்கை விஞ்ஞானத்தின்படி, இரண்டு எதிர் எதிரான சக்திகளுக்கிடையிலேயே பிரதான முரண்பாடும் போராட்டமும் நிகழ்கின்றது. மற்றவை எல்லாம் அவற்றில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தே செயற்படுகின்றன. சமூக விஞ்ஞானத்துக்கும் இது பொருந்தும். *

**5ம் பக்கத்தொடர்ச்சி…**

தோழர்களைப் பயன்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இடத்தில் இன்னொரு ஊடக அயோக்கியத்தனம் குறித்தும் பிரஸ்தாபிக்க வேண்டியுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அக்கட்சியை விட்டு விலகுவதாக அறிவித்தார். ஈ.பி.டி.பி. கட்சியின் உள் விவகாரங்களை ஓரளவுக்கு அறிந்திருந்தவர்களுக்கு அவரது விலகல் ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக இருக்கவில்லை. கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்தே சந்திரகுமாருக்கும் கட்சித் தலைமைக்குமான இடைவெளி பற்றி பேசப்பட்டு வந்திருக்கிறது.

திரு.சந்திரகுமாரும் தனது விலகல் பற்றி அறிவித்தாரேயொழிய, என்ன காரணத்தால் தான் ஈ.பி.டி.பியை விட்டு விலகுகிறார் எனத் தெளிவாக எதனையும் தனது அறிக்கையில் கூறியிருக்கவில்லை.

ஆனால், மூன்றாவது நபர் ஒருவர் சந்திரகுமார் விலகலுக்கான காரணங்கள் எனச் சொல்லி, ஈ.பி.டி.பி. தலைமையின் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகளை அடுக்கி கொழும்பிலிருந்து வெளிவரும் 'தமிழ் மிரர்' பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். அக்கட்டுரையை சில இணையத்தளங்களும் மறுபிரசுரம் செய்தன.

எவரும் இப்படியான கட்டுரைகளை எழுதி வெளியிடுவதற்கு இலங்கை போன்ற ஓரளவு ஜனநாயகம் நிலவும் நாட்டில் சுதந்திரம் உள்ளது. ஆனால் இந்தக் கட்டுரையில் உள்ள பிரச்சினை என்னவென்றால், கட்டுரை எழுதியவரின் பெயர் என, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு கடந்த காலங்களில் செயல்பட்டு வந்த பிரபல்யமிக்க ஒரு மனித உரிமை மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரின் பெயரைப் போட்டதுதான்.

அவரது பெயரில் இந்தக் கட்டுரை வந்ததும் பலருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. ஏனெனில் அந்த மனித உரிமைச் செயல்பாட்டாளருக்கும் தனியான அரசியல் பார்வை, செயல்பாடு எல்லாம் உண்டு. ஈ.பி.டி.பி. கட்சி பற்றியும் பார்வை உண்டு. ஆனால், அவர் இவ்வாறு அரசியல் கட்சிகளை பகிரங்கமாக விமர்ச்சித்து ஒருபோதும் எழுதியவரல்ல. எழுதக் கூடியவரும் அல்ல. எனவே, பலரும் இந்தக் கட்டுரை குறித்து அவரிடம் கேள்வி எழுப்பினர். அதன் பின்னர் விழித்துக் கொண்ட அவர், தமது பக்கம் பற்றிய நியாயத்தை வலியுறுத்துவதற்காக சந்திரகுமாருக்குச் சார்பான யாரோ தனது பெயரை நம்பகத் தன்மைக்காகப் பயன்படுத்தியுள்ளார் என்பதைப் புரிந்துகொண்டார்.

இந்த விவகாரம் குறித்து தமிழ் மிரர் பத்திரிகையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அந்தக் கட்டுரை கிளிநொச்சியில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. அதிலிருந்தே இந்தக் கட்டுரை எழுதியவரின் கபட நோக்கம் அம்பலமானது.

இன்று இலத்திரனியல் ஊடகங்களில் யாரும் எப்படியும் எழுதலாம் என்ற வரையறை இல்லாத நிலைமை தோன்றியுள்ள சூழலில், சிலர் அதைத் தமது கீழ்த்தரமான நோக்கங்களுக்காகத் துஸ்பிரயோகம் செய்கிறார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில், நான் மேலே குறிப்பிட்ட விடயங்களில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் தம்மை முற்போக்காளர்கள், மாற்றுக் கருத்தாளர்கள், நடுநிலைமையாளர்கள் என்று நாமம் பூண்டவர்கள். வலதுசாரிகளோ, மக்கள் விரோதிகளோ இவ்வாறு செய்தால், அது அவர்களது இயல்பு என்று விட்டுவிடலாம். ஆனால் தம்மை மக்களுக்குச் சார்பானவர்கள் என்று சொல்லிக்கொண்டு இத்தகைய மோசடிகளில் ஈடுபடுபவர்களை மன்னிக்க முடியாது.

இப்படியான மோசடியாளர்களை உடனுக்குடன் அம்பலப்படுத்தி, மக்கள் முன் வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது உண்மையான ஜனநாயக ஊடகங்களின் கடமையாகும்.

*

# அர்ச்சுனா மகேந்திரன் விலகுவாரா? விலக்கப்படுவாரா? பாதுகாக்கப்படுவாரா?

சர்ச்சைக்குரிய இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ச்சுனா மகேந்திரனின் பதவிக்காலம் யூன் 30ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதன் பின்னர் அவரது பதவிக் காலத்தை நீடிக்கக்கூடாது என்ற கோரிக்கை அரசாங்கத்தை நோக்கிப் பலமாக விடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் வரலாற்றில் இப்படியான பலமான கோரிக்கை வேறு எந்தவொரு அரச நிறுவனத் தலைவருக்கெதிராகவும் விடுக்கப்பட்டது கிடையாது. மகேந்திரனுக்கு எதிராக இப்படியான ஒரு கோரிக்கை விடுக்கப்படுவதற்குப் பிரதான காரணம், அவர் மத்திய வங்கி பிணை முறி வழங்கிய விடயத்தில் தனது பதவியைப் பயன்படுத்தித் தனது மருமகனுக்கு சலுகை வழங்கினார் என்பதாகும். அதைவிட மேலும் பல குற்றச்சாட்டுகளை சிவில் சமூகம் மகேந்திரன் மீது சுமத்தி இருக்கிறது.

இப்படியான குற்றச்சாட்டுகள் வந்தவுடனேயே மகேந்திரன் நேர்மையான மனிதராக இருந்தால் பதவியைத் துறந்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவர் குற்றச்சாட்டுகளை மறுத்துக்கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்க முயல்வதுடன், ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரைப் பாதுகாப்பதற்குப் படாதபாடுபடுகின்றனர்.

மகேந்திரனைப் பதவி விலகும்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மட்டும் கோரவில்லை. அப்படி அவர்கள் மட்டும் கோரியிருந்தால், அது அரசியல் நோக்கம் கொண்டது என இலேசாகத் தட்டிக் கழித்திருப்பார்கள். அவரைப் பதவி விலகும்படி கோருபவர்களில் சிவில் சமூகம் முக்கியமானது.

அதுமட்டுமல்ல, அரசாங்கத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் அமைச்சரும், கட்சியின் செயலாளருமான எஸ்.பி.திசநாயக்க உட்படப் பல அமைச்சர்களும் கூடக் கோரி இருக்கின்றனர். அத்துடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கக்கூடாது எனக் கோரி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்திருக்கிறது.

தூய்மையான ஆட்சியை மக்களுக்கு வழங்குவதே தனது ஒரேயொரு நோக்கம் என்று சொல்லி வரும் ஜனாதிபதி மைத்திரி, மக்களின் கோரிக்கைக்கும், தனது சொந்தக் கட்சியினரின் வேண்டுகோளுக்கும் மதிப்பளித்து மகேந்திரனுக்குப் பதவி நீடிப்பு வழங்காமல் விடுவாரா அல்லது தனது பதவியைப் பாதுகாப்பதற்காக ஊழல்கார ஐக்கிய தேசியக் கட்சியினருடன் கைகோர்ப்பாரா என்பது யூன் மாதக் கடைசியில் தெரிந்துவிடும்.

இன்றைய மைத்திரி – ரணில் அரசாங்கம் ஊழலை ஒழித்து நல்லாட்சியை வழங்கப் போவதாகச் சொல்லித்தான் பதவிக்கு வந்தது. ஆனால் ஊழலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மத்திய வங்கி ஆளுநரைப் பதவி நீக்கம் செய்யாது அவரது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்ய அனுமதித்துள்ளதுடன், அவருக்கு மக்களின் எதிர்ப்பையும் மீறி பதவி நீடிப்பு வழங்கவும் முயற்சிக்கின்றது.

அதுமட்டுமல்ல, மகிந்த தனது குடும்பத்தவர்களுக்கு அரச உயர் பதவிகளை வழங்கினார் எனக் குற்றஞ்சாட்டிய இன்றைய ஆட்சியாளர்கள், தமது உறிவினர்கள் பலரை வெளிநாட்டுச் சேவைகளுக்கும், அரச உயர் பதவிகளுக்கும் நியமித்து வருகின்றனர்.

மகிந்தவின் 10 வருட ஆட்சியில் நடந்தாகக் கூறப்படும் ஊழல், மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம் என்பனவற்றைப் பட்டியல் இடுபவர்கள், தமது ஒன்றரை வருட ஆட்சியில் நடந்த சீர்கேடுகளை அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தாம் கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியும் விடயம் விளங்கும்.

**–பாரி** (16.06.2016)

# சோமவன்ச அமரசிங்க இயற்கை எய்தினார்!

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தமது 73ஆவது வயதில் 2016 யூன் 14ஆம் திகதி கொழும்பு இராஜகிரியாவிலுள்ள தனது வீட்டில் காலமானார்.

1966களில் ரோகண விஜேவீரவினால் ஜே.வி.பி. ஆரம்பிக்கப்பட்ட போது சோமவன்ச அதில் இணைந்து கொண்டார். படிப்படியாக அக்கட்சியின் அரசியல் தலைமைக்குழு வரை உயர்ந்த சோமவன்ச, ஜே.வி.பி. தலைமையில் விஜேவீர, சாமன் பியசிறி பெர்னான்டோ, லலித் விஜேரத்ன ஆகியோருக்கு அடுத்ததாக நான்காவது மட்டத் தலைவராகத் திகழ்ந்தார்.

ஆர்.பிரேமதாச ஆட்சிக் காலத்தின் போது 1987 – 89 காலகட்டத்தில் ஜே.வி.பி. மேற்கொண்ட இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியின் போது, விஜேவீர உட்பட முழு தலைமையும் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களும் கொல்லப்பட்ட போது தப்பிப் பிழைத்த ஒரேயொரு அரசியல் குழு குறு உறுப்பினர் சோமவன்ச மட்டுமே. அரச பயங்கரவாத வேட்டையிலிருந்து தப்பிய சோமவன்ச, இந்தியாவுக்குத் தப்பிச் சென்று, பின்னர் பிரித்தானியா சென்று அங்கு சில காலம் வாழ்ந்தார். அவர் அவ்வாறு தப்பிச் செல்வதற்கு சோமவன்சவின் உறவினரும்,

பிரேமதாச அரசில் சக்தி வாய்ந்த அமைச்சராகவும் இருந்த சிறிசேன கூரே உதவியதாக அப்பொழுது தகவல்கள் கசிந்திருந்தன.

பிரித்தானியாவில் இருந்துகொண்டு ஜே.வி.பிக்கு தலைமைதாங்கிய சோமவன்ச, சந்திரிகாவுக்கும் ஜே.வி.பிக்கும் தேன்நிலவு ஆரம்பமானதைத் தொடர்ந்து நாடு திரும்பி ஜே.வி.பியின் தலைவராக வெளிப்படையாகச் செயற்படத் தொடங்கினார். சுமார் 20 வருடங்கள் அவர் ஜே.வி.பியின் தலைமைப் பொறுப்பை வகித்தார்.

2014 பெப்ருவரியில் நடைபெற்ற ஜே.வி.பியின் தேசிய மாநாட்டில் சோமவன்ச தலைமைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போதைய தலைவரான அனுரகுமார திசநாயக்க தலைவராகப் பொறுப்பேற்றார். சோமவன்சவை தொடர்ந்து மத்திய குழு உறுப்பினராகவும், கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைவராகவும் செயற்படும்படி புதிய தலைமை வேண்டியும், சோமவன்ச தலைமை மீது அதிருப்தி கொண்டு ஜே.வி.பியை விட்டு வெளியேறிச் சென்று 'மக்கள் சேவகர்கள் கட்சி' என்ற புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தார். இந்த நிலைமையிலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

சோமவன்சவின் மரணத்துடன், ஜே.வி.பியின் 15 பேர் கொண்ட முதலாவது தலைமுறைத் தலைமையின் எஞ்சியிருந்த கடைசி மனிதரும் மறைந்துவிட்டார்.

## முதுபெரும் அரசியல்வாதியும், தொழிற்சங்கவாதியுமான அலவி மௌலானா காலமானார்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரும், அக்கட்சியின் தொழிற்சங்கத் தலைவரும், முன்னாள் மேல்மாகாண ஆளுநருமான அலவி மௌலானா (அகமட் சையித் அலவி மௌலானா), 2016 யூன் 15ஆம் திகதி தமது 84ஆவது வயதில் கொழும்பில் காலமானார். அண்மையில்தான் அவர் ஈரல் சம்பந்தமான சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அலவி 1948ஆம் ஆண்டில் ஒரு தொழிற்சங்கவாதியாக பொது வாழ்க்கையில் பிரவேசித்தார். பின்னர் கொழும்பு மாநகரசபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்ட காலத்தில், அலவி மௌலானா அக்கட்சியில் தன்னை ஒரு உறுப்பினராக இணைத்துக் கொண்டார். பின்னர் பண்டாரநாயக்கவின் மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலும் அவரது நம்பிக்கைக்கு உரியவராக அலவி இருந்தார். அதன் பின்னர் ஜனாதிபதிகளாக பதவி வகித்த சந்திரிக, மகிந்த ஆகியோரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் இருந்தார். தனது இறுதிக்காலம் வரை சுதந்திரக் கட்சியின் மிக உறுதியான விசுவாசியாகவே வாழ்ந்தார்.

ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன கட்சிக்குத் துரோகம் இழைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்ட போதும், பின்னர் கட்சி மைத்திரி அணி – மகிந்த அணி எனப் பிளவுபட்ட போதும், அலவி மிகவும் விசனம் கொண்டிருந்தார்.

அலவியின் கட்சி விசுவாசத்தையும், நேர்மையையும் கருத்தில் கொண்ட சுதந்திரக் கட்சி, அவருக்கு பல தடவைகள் அமைச்சர் பதவியை வழங்கியதுடன், மேல் மாகாண ஆளுநர் பதவியையும் வழங்கிக் கௌரவித்தது.

தொழிற்சங்கத் துறையில் அலவியின் போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் அமைந்த ஐ.தே.கவின் 17 வருட கொடூரமான ஆட்சிக் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடைபெற்ற போராட்டங்களின் போது, அலவியின் மண்டை பல தடவைகள் பொலிசாரினால் உடைக்கப்பட்டிருக்கிறது.

பழகுவதற்கு மிக இனிமையானவரான அலவி, இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்டவராகச் செயற்பட்ட ஒரு உதாரண புருசராவார். வழமையாக அரசியல்வாதிகளுக்கு இருக்கும் போட்டி, பொறாமை, கழுத்தறுப்பு, பதவி மோகம் என்பனவற்றுக்கு அப்பாற்பட்டவராக அலவியின் வாழ்க்கை அமைந்திருந்தது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பிடிப்பவையாகவும் இருந்ததால், அவற்றின் போக்கு சர்வதேச, பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. அது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம், உள்நாட்டுக் காரணிகளால் ஆரம்பமானாலும், சர்வதேச, பிராந்திய சக்திகளினால் தமது தேவை கருதி ஊட்டி வளர்க்கப்பட்ட தமிழ் பிரிவினைவாத, பயங்கரவாத, பாசிச சக்தியான புலிகளை முன்னைய அரசாங்கம் ஒழித்துக் கட்டி, இலங்கையை யுத்தமற்ற பூமியாக மாற்றியதை இந்த வல்லாதிக்க சக்திகள் விரும்பவில்லை. இலங்கையைத் தொடர்ந்தும் யுத்த பூமியாக வைத்திருந்தாலேயே தமது பூகோள – பிராந்திய நலன்களுக்கு ஏதுவாக இருக்கும் எனக் கருதிய இருந்த அந்தச் சக்திகளுக்கு, யுத்தம் முடிவுற்றமை சீரணிக்க முடியாத ஒன்றாகும்.

மூன்றாவது காரணம், ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு இலங்கையில் இடமளிக்காத முன்னைய அரசாங்கம், அதற்கு எதிரான நாடுகளுடன் நெருங்கிய உறவுகளைப் பேண முற்பட்டமையாகும்.

எனவே, முன்னைய அரசாங்கத்தை விரும்பாத சில நாடுகள் உலக அரங்கில் இருந்தது ஆச்சரியமானதல்ல. அதேநேரத்தில் இலங்கை நீண்டகாலமாகப் பின்பற்றி வரும் அணிசேராக் கொள்கைக்கு மாறாக, ஐ.தே.கவின் ஏகாதிபத்திய சார்புக் கொள்கையுடன் மைத்திரிபால சிறிசேன

சமரசம் செய்துகொண்ட பின்னர், முன்னைய அரசாங்கத்தை வெறுத்த நாடுகள் தற்போதைய அரசாங்கத்துடன் தேன்நிலவு கொண்டாடுவது ஒன்றும் புதுமையான விடயமும் அல்ல.

அதிலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, வேறு எந்த நாட்டையும் விட சீனாவை குறிவைத்து ஐ.தே.கவும், மைத்திரி குழுவினரும் அவதூறுப் பிரச்சாரம் மேற்கொண்ட பின்னர், தற்போதைய அரசு சர்வதேச, பிராந்திய சக்திகளின் செல்லப் பிள்ளையாக இருப்பது யதார்த்தமானதே. ஆனாலும், இன்றைய உலகில் அமெரிக்க தலைமையிலான மேற்கு நாடுகளும், சீனாவின் போட்டி நாடாக சில ஊடகங்களால் வர்ணிக்கப்படும் இந்தியாவும் கூட, சீனாவைப் புறந்தள்ளிவிட்டு எந்தவொரு உலக விவகாரங்களையும் கையாள முடியாது என்ற நிலை உருவாகியுள்ள சூழலில், சின்னஞ்சிறிய நாடான இலங்கையால் மலையுடன் தலையை மோதுவது ஆபத்தானது என்பதை தற்போதைய அரசாங்கம் காலம் பிந்தித்தான் உணர வேண்டி வந்தது.

இருப்பினும், தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கத்தைய சார்பானதாகத்தான் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஜனாதிபதி சில சந்தர்ப்பங்களில் மறைக்க முற்பட்டபோதும் அதுதான் உண்மையாகும். ஆனால் அந்தப் போக்கு இலங்கையை உண்மையான நட்பு நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தவும், எதிர்காலத்தில் இலங்கை ஏகாதிபத்திய சக்திகளின் வேட்டைக்காடாக மாறவும்தான் வழிவகுக்கும்.

இலங்கைக்கு என வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு வரலாறு இருக்கிறது. 1948இல் இலங்கை சுதந்திரமடைந்த போது ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.க., இலங்கையை அதுவரை ஆட்சி செய்து வந்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கையையே தனது வெளிநாட்டுக் கொள்கையாகவும் கடைப்பிடித்தது. இந்த நிலை 1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆட்சிபீடம் ஏறும்வரை நீடித்தது.

பண்டாரநாயக்க ஆட்சியின் போதும், அதன்பின்னர் அவரது துணைவியார் சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின் போதும், அவர்களது அரசாங்கங்கள் உறுதியான அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றின. அதனால் சோசலிச நாடுகளினதும், வளர்முக நாடுகளினதும் நட்புறவும் உதவியும் இலங்கைக்குத் தாராளமாகக் கிடைத்தது. அதற்குக் காரணம், அதுவரை ஐ.தே.க அரசுகளால் பின்பற்றப்பட்டு வந்த ஏகாதிபத்திய சார்பு வெளிநாட்டுக் கொள்கையை அவர்கள் மாற்றி அமைத்ததுதான்.

குறிப்பாக, 1961ஆம் ஆண்டு யூகோஸ்சிலோவாக்கியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் நடைபெற்ற முதலாவது அணிசேரா மாநாட்டில் பங்குபற்றிய 12 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அந்த மாநாட்டில் உலகின் பிரசித்தி பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசியத் தலைவர்களான யூகோவின் ஜனாதிபதி மார்சல் டிட்டோ, இந்தியாவின் பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்தோனேசிய ஜனாதிபதி சுகர்ணோ போன்றோருடன் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும் பங்குபற்றினார்.

அந்த மாநாட்டின் பின்னரான காலத்தில், ஐ.தே.க ஆட்சியில் இருந்த காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில், இலங்கை உறுதியான அணிசேராக் கொள்கையையே பின்பற்றி வந்தது. அதன் காரணமாக, சிறீமாவோவின் ஆட்சிக் காலத்தின் போது, அணிசேரா மாநாட்டின் உச்சி மாநாடொன்றை இலங்கையில் நடாத்தும் கௌரவமும் இலங்கைக்குக் கிடைத்தது. அதுமாத்திரமின்றி, 1962இல் இந்திய — சீனப் போர் நடைபெற்ற போதும், 1971இல் இந்திய — பாகிஸ்தான் போர் நடைபெற்ற போதும், இலங்கையின் பிரதமரான சிறீமாவோ பண்டாரநாயக்க மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடும் தகுதியும் மரியாதையும் இருந்தது.

அதுமட்டுமின்றி, இந்து சமுத்திரத்தில் உள்ள டியாகோகார்சியா தீவில் இருந்த பிரித்தானிய இராணுவத்தளத்தை அமெரிக்கா கையேற்று, அங்கு தனது தளத்தை நிறுவிய போதும், சோவியத் யூனியன் சீனாவுக்கு எதிராக இந்தியாவை மையமாக வைத்து 'ஆசிய கூட்டுப் பந்தோபஸ்து' என்ற தனது இராணுவத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றபோதும், இந்து சமுத்திரத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர அந்த இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் எடுத்த முயற்சிகளை சிறீமாவோ தலைமையிலான இலங்கை அரசு உறுதியாக எதிர்த்தது.

அதுமட்டுமின்றி, சிறீமாவோ பண்டாரநாயக்க தானே நேரடியாக ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அந்த நேரத்தில் இலங்கைக்கு அணிசேரா இயக்கத்தில் இருந்த அபரிமிதமான செல்வாக்குக் காரணமாக, அந்தத் தீர்மானம் மூன்றில் இரண்டு பங்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெற்று நிறைவேறியது.

ஆனால் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசு இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி, இந்தியா உட்பட அணிசேரா இயக்கத்தின் பகையைத் தேடிக்கொண்டது. பின்னர், ஜே.ஆரின் கொள்கை காரணமாக இந்தியாவின் உதவியுடன் உருவான தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களை அழிக்க, இலங்கை அரசு அமெரிக்காவின் உதவியை நாடியது. அதன் காரணமாக, இலங்கையின் நீண்டகால நட்பு நாடுகள் பலவும் இலங்கையை விட்டுத் தூர விலகிச் சென்றன.

ஆனால் மீண்டும் சந்திரிக தலைமையில் ஆட்சி அமைந்ததும், அந்த அரசாங்கம் மீளவும் பின்பற்றிய அணிசேராக் கொள்கையின் காரணமாக, நட்பு நாடுகள் பலவும் திரும்பவும் இலங்கைக்கு உதவ முன்வந்தன. அந்த உதவி காரணமாக, இலங்கையின் வேண்டுகோளை ஏற்று, பல நாடுகள் தமது நடுகளில் பாசிசப் புலிகள் அமைப்பைத் தடை செய்தன. அது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை உருவாக்கியது.

அதேபோல, தொடர்ந்து மகிந்த ராஜபக்ச அரசு பின்பற்றிய அணிசேராக் கொள்கையின் காரணமாக, பல நாடுகளின் உதவியுடன் பாசிசப் புலிகளை இறுதியும் அறுதியுமாகத் தோற்கடிக்க முடிந்தது. புலிகளைத் தோற்கடிக்கும் விடயத்தில் அமெரிக்காவோ இந்தியாவோ தன்னலமற்ற உண்மையான உதவியை இலங்கைக்கு வழங்கவில்லை என்பதே உண்மையாகும்.

இந்த வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து தற்போதைய இலங்கை அரசு நிச்சயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, எப்பொழுது இலங்கை உறுதியான முறையில் அணிசேராக் கொள்கையில் ஊன்றி நின்றதோ, அந்த நேரங்களில்தான் உண்மையான நன்மைகளைப் பெற்றிருக்கிறது. இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, தற்போதைய மைத்திரி — ரணில் தலைமையிலான இலங்கை அரசு, உலக ஆதிக்கத்துக்காக அலையும் சர்வதேச, பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு ஆதரவான வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து விடுபட்டு, மீண்டும் அணிசேராக் கொள்கையைத் தனது வெளிநாட்டுக் கொள்கையாக வரித்துக் கொள்ள வேண்டும். *

# புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரரும், போர் எதிர்ப்பாளருமான முகமத் அலி காலமானார்!

உலகின் அதிபாரக் குத்துச்சண்டை வீரரான முகமத் அலி நீண்டகால பார்க்கின்ஸன் (Parkinson) நோய் காரணமாக 74ஆவது வயதில் யூன் 3ஆம் திகதி அமெரிக்காவில் காலமானார்.


அமெரிக்க கறுப்பு இனத்தவரான அலியின் இயற்பெயர் காசியஸ் மார்செலஸ் கிளே யூனியர் (Cassius Marcellus Clay Jr) ஆகும். அமெரிக்காவில் கறுப்பு இன மக்களின் மனித உரிமைப் போராட்டம் தீவிரமடைந்திருந்த அந்தக் காலகட்டத்தில் அந்தப் பெயர் அடிமைத்தனத்தின் சின்னம் என்று சொல்லி, 22ஆவது வயதில் தனது பெயரை முகமத் அலி என மாற்றிக் கொண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். இருப்பினும் காசியஸ் கிளே என்ற பெயராலும் அவர் பிரசித்தி பெற்றிருந்தார்.

அலி தமது 12ஆவது வயதிலேயே குத்துச்சண்டை பயிற்சி பெற ஆரம்பித்துவிட்டார். 1960ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக்ஸ் போட்டியில் பங்குபற்றி முதன்முதலாக மென்பார குத்துச்சண்டைப் போட்டியில் வென்று தங்கப் பதக்கம் பெற்றார். 1964இல் தமது 22ஆவது வயதில் அதிபாரக் குத்துச்சண்டை வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1974 மற்றும் 1978ஆம் ஆண்டுகளிலும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அமெரிக்காவில் 1963 நொவெம்பரில் அப்போதைய ஜனாதிபதி ஜோன் எப்.கெனடி கொலையாளி ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டு, உதவி ஜனாதிபதி லின்டன் பி.ஜோன்சன் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும், வியட்நாமில்அமெரிக்கா மேற்கொண்டிருந்த ஆக்கிரமிப்பு யுத்தம் தீவிரமடையத் தொடங்கியது. அந்தக் காலகட்டத்தில் கட்டாய இராணுவ சேவை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு, இளைஞர்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மிகவும் திடகாத்திரமான இளைஞனாக இருந்த முகமத் அலியையும் இராணுவத்தில் சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அமெரிக்கா வியட்நாமில் மேற்கொண்டிருந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தை வெறுத்த அலி இராணுவத்தில் சேர மறுத்துவிட்டார்.

"நான் வியட்கொங்குடன் சர்ச்சையில் ஈடுபட விரும்பவில்லை" (I am n't got no quarrel with the Vietcong) என அவர் அப்பொழுது கூறினார். (வியட்கொங் என்பது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி வந்த தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகும்)

அதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டதுடன், அவரது பட்டமும் பறிக்கப்பட்டு, நான்கு வருடங்களுக்கு குத்துச்சண்டைப் போட்டிகள் எதிலும் பங்குபற்றாதவாறு தடையும் விதிக்கப்பட்டது. பின்னர் அவர் அமெரிக்க உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்ததின் காரணமாக அவர் மீதான தடை 1971இல் நீக்கப்பட்டது.



1966 மார்ச் 29ஆம் திகதி முகமத் அலி சிக்காக்கோ நகரில் ஒரு குத்துச்சண்டைப் போட்டியில் ஈடுபடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், ஓய்வுபெற்ற அமெரிக்கப் போர் வீரர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக இலினோய்ஸ் மாகாண விளையாட்டு ஆணைக்குழு அந்தப் போட்டியை "சட்ட விரோதமானது" எனச் சொல்லி இரத்துச் செய்துவிட்டது. அதற்குச் சொல்லப்பட்ட காரணம், அலியின் "தேசபக்தியற்ற" நிலைப்பாடு என்பதாகும்.

1967இல் கனடாவின் மொன்றியல் நகரில் அலி போட்டியிட இருந்த நிகழ்ச்சியின் போதும், இந்த மாதிரியான ஒரு எதிர்ப்பை கனடிய ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் விடுத்தனர். அலிக்கு அனுமதி அளித்தால், தாம் 'எக்ஸ்போ 67' (EXPO – 67) நிகழ்ச்சியைப் புறக்கணிக்கப் போவதாக அவர்கள் எச்சரித்திருந்தனர். ஆனால் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த அமைப்பு அவர்களின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட்டு அலியின் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடாத்தி முடித்தது.

முகமத் அலியை வியட்நாம் போரில் பங்குபற்றுமாறு வலியுறுத்திய காலகட்டத்தில், அதற்கு உலகம் முழுவதும் எதிர்ப்பு கிளம்பியது. இலங்கையிலும் அதன் எதிரொலி இருந்தது. அப்பொழுது கொழும்பிலிருந்து புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டு வந்த Red Flag (செங்கொடி) என்ற ஆங்கில வார இதழை நெறிப்படுத்தி வந்த மு.கார்த்திகேசன் (மாஸ்டர்), அதைப் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில், "முகமத் அலி வியட்நாம் போருக்கு காசியஸ் ஆகப் போனால் கிளே — Clay (களிமண்) ஆகத்தான் திரும்பி வருவார்" என தமது வழமையான நகைச்சுவைப் பாணியில் எழுதினார்.

அமெரிக்காவுக்கு ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட கறுப்பு இன மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறு நீண்ட பல காலகட்டங்களைக் கொண்டது. அதற்கு அகிம்சை வழியில் போராடிய மார்டின் லூதர் கிங் மற்றும் வன்முறை வழியில் போராடிய றொபேர்ட் வில்லியம்ஸ் போன்றவர்களுடன், முகமத் அலி போன்ற வீரர்களும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். அதன் அறுவடையாகவே பராக் ஒபாமா போன்றவர்களால் ஒருகாலத்தில் நிறவெறி பிடித்திருந்த அமெரிக்காவின் ஜனாதிபதியாக வர முடிந்தது.

ஒரு காலத்தில் தனது குத்துச்சண்டைத் திறமையாலும், வியட்நாம் போர் எதிர்ப்பின் காரணமாகவும், உலக ஊடகங்களின் தலைப்பை அலங்கரித்த முகமத் அலி, தனது இறப்பின் மூலம் மீண்டுமொருமுறை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார். அவரது நாமம் சுதந்திரத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் போராடும் மக்களின் மனங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

**– சம்யுக்தா**